விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## சங்குநாதம்


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 24 ,
ஒலி 020 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 24 ஞாயிற்றுக்கிழமை (08.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

5 ரூபாயினால்

## முட்டையின் விலை குறைப்பு

(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலை 5 ரூபாயினால் குறைக்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், நேற்று 19

## தேர்தல் முறைமையை மாற்றியமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டின் தேர்தல் முறைமையை விரைவில் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் ஊடகம் ஒன்று ஜனாதிபதியிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தல் தொடர்பான 19

தேர்தல்கள் ஆணைக்குழுவை மிரட்டி

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

### அரசு மீது எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவை மிரட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசாங்கம் முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசின் இந்த மிரட்டலுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு அடிபணிந்து போகக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே 19

எதிர்வரும் 10ஆம் திகதி

## அமெரிக்க பிரதிநிதி இலங்கை விஜயம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதி ஒருவர் எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

தெற்காசிய பிராந்தியம் தொடர்பான அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் சுமோனா குஹா என்ற அதிகாரியே இலங்கைக்கு 19

'கெத்து பசங்க'

## வட்ஸ்அப் குழுவை சேர்ந்த நால்வர் கைது

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா "கெத்து பசங்க" என்ற வட்ஸ் அப் குழுவை சேர்ந்த நான்கு பேரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பூவரசங்குளம், தட்டான்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் வன்முறை 19

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் கலந்துரையாட

### தேர்தல்கள் ஆணைக்குழு நாளை கூடுகின்றது

(கொழும்பு)

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பிலான ஆணைக்குழுவின் செயற்பாடு 19

யாழ். - தமிழக கப்பல் சேவையை முன்னிட்டு

## காங்கேசன்துறை துறைமுகத்தில் கட்டுமான பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை - தமிழகம் இடையே கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காங்கேசன்துறை துறைமுகத்தில் கட்டுமானப் பணிகளை மிக விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறினார்.

வடமாகாண ஆளுநர் தலைமையில் சிவில் விமான சேவைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச் 19

இலங்கை வாழ் தமிழர்களுக்கு

## இந்தியா எப்போதும் துணை நிற்க வேண்டும்

### சென்னையில் சுமந்திரன் எம்.பி



(சென்னை)

இலங்கை வாழ் தமிழர்களுக்கு இந் 19

## சாதாரண தர பரீட்சையை

### 'மே' இல் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை இந்த ஆண்டு மே மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர 19

மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து

## தீப்பந்தப் போராட்டம்

### சோபித தேரர் அழைப்பு

(கொழும்பு)

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மாலை 6.30 மணி முதல் 07 மணிவரையான காலப் பகுதியில் மின் விளக்குகளை அணைத்து, தீப்பந்தம் ஏந்தி அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு மக்கள் பேரவையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு
# மணிவிழாக் காணும் நாயகி



திருமதி
## சறோஜினிதேவி பாலகிருஷ்ணன்
(இலங்கை ஆசிரியர் சேவை I)

### சேவைக்காலம்
29.11.1989 - 01.02.1993 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
02.02.1993 - 31.12.1994 யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை
01.01.1995 - 14.02.2010 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
15.02.2010 - 07.01.2023 யா/சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை

எமது பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி (07.01.2023) ஓய்வு பெறும் திருமதி சறோஜினிதேவி பாலகிருஷ்ணன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

(13863)

(ஆசிரியர் சகோதரத்துவம்)
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை - சங்கத்தானை சாவகச்சேரி.

# பணியாளர்கள் தேவை (பெண்)

யாழ். நகரில் அலுவலகம் ஒன்றிற்கு சிட்டை எழுதுனர், பொதி செய்தல் போன்ற பணிகளுக்கு பெண் பணியாளர் தேவை. யாழ் நகரில் இருந்து 5km க்குள் உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயதெல்லை (18–35)

**முகவரி வைத்தீஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்.**
தொடர்புகளுக்கு - 075 881 0010 / 077 122 8841

(14183)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், வங்கியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(C-5752)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் தமிழ்பாட ஆசிரியர்
திருமதி சிவனேஸ்வரி வில்வராஜன் அவர்களின்
அன்புத் தாயார்

அமரர்
## இராசலிங்கம் மீனாட்சிஅம்மா

அவர்கள் 05.01.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா
ஊழியர் நலன்புரிச் சங்கம், யா/இணுவில் மத்திய கல்லூரி.

(14191)

# துயரில் பங்கு
# கொள்கின்றோம்...



சாமியன் அரசடி (கரவெட்டியை பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை புகுமிடமாகவும், அவுஸ்திரேலியா மெல்பேர்னை வசிப்பிடமாகவும் கொண்ட (உன்னத சாய் பக்தையான)

அமரர் அன்னை
## திருமதி சிவாஜினி ஆனந்தகணேசன்
(பட்டயக் கணக்காளர்)

பிறப்பு : 27.07.1953
இறப்பு : 04.01.2023

நிலையற்ற மானிட வாழ்வில்
நிலையான வழிகாட்டிச் சென்று
நிஜமான நிகழ்வுகளை நிலை நிறுத்திய
நீங்கள் இன்று எம்மை விட்டுச் சென்றீரோ?
நிம்மதியாய் உறங்கிடுவீர்
உங்கள் நினைவோடு
சீரடி சாய் பணி தொடர்ந்திடுவோம்

அவர்களின் பிரிவால்
துயருறும் உறவுகளின் துயரில்
பங்கெடுக்கின்றோம்.

(14184)

**கருணையூர் ஸ்ரீ அபய சீரடிசாய் நாதர் ஆலயத்தினர் கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடன் மறுசீரமைப்பு

# இம்மாத இறுதியில் இந்தியா பதிலளிக்கும்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

(கொழும்பு)


**இலங்கையின் கடன்மறு சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தமாத இறுதியில் இந்தியா பதிலளிக்கும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவிகள் இந்த வருடத்தின் முதல்காலாண்டில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறு சீரமைப்பு குறித்து இந்தியா இந்தமாத இறுதியில் பதிலளிக்கும். சீனாவுடன் இன்னுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன. அவையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சீனா வழங்கிய கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கவில்லை. ஆனால் அடுத்த 20 வருடங்களிற்குள் கடன்களை வழங்குவதற்கான கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.



இதற்கு சீனாவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# இந்தியா செல்லவுள்ளார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.

இந்தியாவினால் நடத்தப்படும் உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் அவர் அங்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகிறது.

இந்த நிலையில், இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஜனவரி 12 மற்றும் ஜனவரி 13 ஆகிய திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது. (4)

### தேர்தல்கள் ஆணைக்குழுவில்

# உறுப்பினர்கள் இடையே முரண்பாடு கிடையாது

### பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு கிடையாது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடு நிலவி வருவதாக சிலர் குற்றம் சுமத்தி வரும் போதிலும் உறுப்பினர்கள் மத்தியில் அவ்வாறான, முரண்பாட்டு நிலைமைகள் தென்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தாலும் அது தேர்தல் அறிவிப்பினை பாதிக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படுவதனை சீர்குலைப்பதற்கு ஒரு சில தரப்பினர் சூழ்ச்சி செய்யும் முயற்சிகளை அவதானிக்க முடிவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு என்பது சுயாதீன ஓர் அமைப்பு என அவர் தெரிவித்துள்ளார். (4)

# டொலருக்கான ஊக்கத்தொகை நிறுத்தம் - மத்திய வங்கி

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரிபவர்களினால் அனுப்பப்படும் ஒவ்வொரு டொலருக்கும் 2 ரூபாய் ஊக்கத்தொகையை இலங்கையின் மத்திய வங்கி நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முறையான வங்கி வலையமைப்புக்களின் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிக்க 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் இந்த ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சட்டவிரோதமான ஹவாலா அல்லது உண்டியல் முறைகள் மூலம் பணம் அனுப்பியதை அடுத்தே இந்த முறை அறிமுகப்படுத்தபட்டது.

எனினும் எதிர்பார்த்தபடி வெளிநாடுகளின் தொழிலாளர்கள் பணத்தை வங்கிகளின் ஊடாக அனுப்பப்படவில்லை.

இதனையடுத்தே இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு அமெரிக்க டொலர் அனுப்புதலுக்கும் வழங்கப்படும் 2 ரூபாய் ஊக்கத்தொகையை நிறுத்துமாறு வங்கிகளை மத்திய வங்கி கேட்டுக் கொண்டதாக வங்கி ஒன்றின் அதிகாரி தெரிவித்துள்ளார். (4)

# இன்று முதல் விவசாயிகளுக்கு சீனாவின் டீசல்

(கொழும்பு)

சீனாவினால் வழங்கப்பட்ட 6.98 மில்லியன் லீற்றர் டீசல் இன்று முதல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சினால் உருவாக்கப்பட்ட புதிய செயலி மூலம் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஹெக்டேரில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு இந்த எரிபொருளை இலவசமாக வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். (4)

# 17 ஆம் திகதி முதல் உ/த வகுப்புகளுக்கு தடை

### கல்வி அமைச்சு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் வகுப்புகளை நடத்துவதற்கு எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் பரீட்சை தொடர்பான உதவி வகுப்புகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதை தடை செய்யுமாறு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஜனவரி 2 ஆம் திகதி முதல் ஜனவரி 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதேவேளை, உயர்தரப் பரீட்சை காரணமாக ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 19 ஆம் திகதி வரை உள்ள நாட்கள் பாடசாலைகளுக்கு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணைக்கான இறுதிக் கட்டம் பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் மார்ச் 24 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (4)


கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மகாஜன சபை தலைவரும் அளவெட்டி அபிவிருத்தி மன்ற ஆலோசகருமாகிய திரு. வை.சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவி

அமரர். சாந்தநாயகி சுப்பிரமணியம்



அவர்களின் மறைவையிட்டு வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


(14185)

அளவெட்டி மகாஜன சபை, அளவெட்டி அபிவிருத்தி மன்றம்.

தோற்றம் 1951.02.14 மறைவு 2023.01.05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் சமநிலையில் நிறைவு



பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது.

கராச்சியில் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 449 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக டேவோன் கோன்வே 122 ஓட்டங்களையும் டொம் லதம் 71 ஓட்டங்களையும் மெட் ஹென்ரி ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அப்ரர் அஹமட் 4 விக்கெட்டுகளையும் நஷிம்ஷா மற்றும் ஆகா சல்மான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, 408 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சவுத் ஷாகீல் ஆட்டமிழக்காது 125 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 83 ஓட்டங்களையும் சப்ராஸ் அஹமட் 78 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அஜாஸ் பட்டேல் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் சவுத்தீ, மெட் ஹென்ரி மற்றும் டேரில் மிட்செல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 41 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 277 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. இதனால், பாகிஸ்தான் அணிக்கு 319 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டொம் பிளெண்டல் மற்றும் பிரேஸ்வெல் ஆகியோர் தலா 74 ஓட்டங்களையும் லதம் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், நஷிம்ஷா, ஹம்சா, அப்ரர் அஹமட், ஹசன் அலி மற்றும் ஆகா சல்மன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனையடுத்து 319 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, போட்டியின் இறுதி நாளான நேற்று வரை 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 304 ஓட்டங்களை பெற்று களத்தில் இருந்தது. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இதன்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், சமநிலையில் முடிவடைந்தது.


இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சப்ராஸ் அஹமட் 118 ஓட்டங்களையும் ஷான் மசூத் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பிரேஸ்வெல் 4 விக்கெட்டுகளையும் சவுத்தி மற்றும் இஷ்சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மெட் ஹென்ரி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் பாகிஸ்தானின் சப்ராஸ் அஹமட் தெரிவுசெய்யப்பட்டார். (4)

# நியூஸிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடர்

## பாகிஸ்தான் அணி அறிவிப்பு



நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 16 பேர் கொண்ட அணியில் அறிமுக துடுப்பாட்ட வீரர்களான தயப் தாஹிர், கம்ரான் குலாம் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் உசாமா மிர் ஆகியோர் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஷான் மசூத் மற்றும் ஹரிஸ் சோஹைல் ஆகியோர் மீண்டும் அணிக்கு அழைக்கப்படுள்ளனர். ஷர்ஜீல் கானுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

வலது ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் பாகிஸ்தான் துணை தலைவர் ஷதாப்கான் அணியில் இடம்பெறவில்லை.

இதேபோல, ராவல்பிண்டியில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் போது காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ்ரவூப் மற்றும்ஷாஹீன் அப்ரிடி ஆகியோருக்கு மருத்துவக் குழுவின் ஆலோசனைக்கு அமைய கூடுதல் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

பாபர் அசாம் தலைமையிலான அணியில், ஃபகார் ஸமான், ஹாரிஸ் ரவூஃப், ஹாரிஸ் சோஹைல், இமாம -உல்-ஹக், கம்ரான் குலாம், முகமது ஹஸ்னைன், முகமது நவாஸ், முகமது ரிஸ்வான், முகமது வாசிம் ஜூனியர், நசீம் ஷா, சல்மான் அலி ஆகா, ஷாநவாஸ் தஹானி, ஷான் மசூத், தயப் தாஹிர், உஸமா மிர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடிவரும் பாகிஸ்தான் அணி, அடுத்ததாக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இதன் முதல் போட்டி நாளை மறுதினம் 9 ஆம் திகதி கராச்சியில் நடைபெறவுள்ளது. (4)

# பெப்ரவரியுடன் ஓய்வு பெறுகிறார் டென்னிஸ் வீராங்கனை சானியா



இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா. கடந்த ஆண்டு இறுதி யில் டென்னிசில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்து இருந்தார்.

திடீரென அவர் தனது முடிவை மாற்றி கொண்டார். இந்த நிலையில் தற்போது சானியா மிர்சா தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் பிப்ரவரியில் துபாயில் நடைபெறும் டபிள்யு.டி.ஏ. போட்டி அவரது கடைசி ஆட்டமாகும்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

டபிள்யூ.டி.ஏ. இறுதி போட்டிக்கு பிறகு டென்னிஸ் ஆடுவதை நிறுத்திக் கொள்ள போகிறேன்.

இந்த போட்டியோடு நான் ஓய்வு பெற திட்டமிட்டுள்ளேன் எனத் தெரிவித்தார். சானியா பெண்கள் இரட்டையர் பிரிவில் 3 கிரண்ட் சிலாம் பட்டங்களை கைப்பற்றி உள்ளார். 2015 இல் விம் பிள்டன், அமெரிக்க ஓபன் பட்டங்களையும், 2016 இல் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

2011 பிரெஞ்சு ஓபன் இறுதி போட்டியில் தோற்றார். கலப்பு இரட்டையர் பிரிவிலும் சானியா மிர்சா 3 கிராண்ட் சிலாம் பட்டங்களை பெற்றார். 2009 இல் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தையும் 2012 இல் பிரெஞ்சு ஓபன் பட்ட த்தையும் 2014 இல் அமெரிக்க ஓபன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

ஒட்டு மொத்தமாக இரட்டையர் பிரிவில் அவர் 6 கிராண்ட்சிலாம் பட்டம் வென்று உள்ளார்.

வருகிற அவுஸ்திரேலிய ஓபனில் சானியா மிர்சா, கஜகஸ்தான் வீராங்கனை அனாடேனிலாவுடன் இணைந்து ஆடவுள்ளார். அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் எதிர்வரும் 16 ஆம் திகதி மேல்போர்னில் தொடங்குகிறது. கடந்த ஆண்டு சானியா மிர்சா அவுஸ்திரேலிய ஓபனில் முதல் சுற்றிலேயே வெளியேறினார். கலப்பு இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ராஜீவ் ராமுடன் இணைந்து கால் இறுதி வரை முன்னேறி இருந்தார். (4)



ஜே/70 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பாங்சால் வீதியில் அமைந்து சேவையாற்றி வந்த மருத்துவமனை தற்போது தொடர்மாடி குடியிருப்பு கட்டடத் தொகுதி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (படம்:-ஏனெஸ்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 60% வரை தள்ளுபடி

## வாடகைக் கொள்வனவு மற்றும் கடனட்டைகளுக்கு வட்டியற்ற தவணைக் கொடுப்பனவுகள்

### இச்சலுகை ஜனவரி 15 வரை மாத்திரம்!

BUY ONLINE
Abans.com

Abans
LED TV



ABTV32A25
சாதாரண விலை ரூ. 79,999
தள்ளுபடி ரூ. 10,000
சேல் விலை ரூ. 69,999

TOSHIBA
LED TV



THTV32S25KP
சாதாரண விலை ரூ. 89,999
தள்ளுபடி ரூ. 25,000
சேல் விலை ரூ. 64,999

Abans
AUDIO



ஆரம்ப விலை ரூ. 2,499 இலிருந்து
ரூ. 30,000 வரை தள்ளுபடி

LG
குளிர்சாதனப்பெட்டி




GL-M332RPZI
சாதாரண விலை ரூ. 308,990
தள்ளுபடி ரூ. 112,000
சேல் விலை ரூ. 196,990

LG
குளிர்சாதனப்பெட்டி




GL-K272SLBB
சாதாரண விலை ரூ. 205,990
தள்ளுபடி ரூ. 36,000
சேல் விலை ரூ. 169,990

Abans
குளிர்சாதனப்பெட்டி




ABLGPRO-200SD
சாதாரண விலை ரூ. 117,990
தள்ளுபடி ரூ. 20,000
சேல் விலை ரூ. 97,990

Whites Haier Abans
போத்தல் கூலர்




சாதாரண விலை ரூ. 139,990 இலிருந்து
தள்ளுபடி ரூ. 30,000 இலிருந்து
சேல் விலை ரூ. 109,990 இலிருந்து

Abans
ஃபுல் ஒடோ டொப்லோடர்




AWM-75FA
சாதாரண விலை ரூ. 112,990
தள்ளுபடி ரூ. 23,000
சேல் விலை ரூ. 89,990

Abans
செஸ்ட் பிரீஸர்




சாதாரண விலை ரூ. 149,990 இலிருந்து
தள்ளுபடி ரூ. 45,000 இலிருந்து
சேல் விலை ரூ. 104,990 இலிருந்து

LG
இன்வெர்டர் வளிச்சீராக்கி




சாதாரண விலை ரூ. 334,990 இலிருந்து
தள்ளுபடி ரூ. 45,000 இலிருந்து
சேல் விலை ரூ. 289,990 இலிருந்து

ELBA ஹொப்



ES60-401BKE
சாதாரண விலை ரூ. 126,990
தள்ளுபடி ரூ. 32,000
சேல் விலை ரூ. 94,990

mistral
பம்புடனான துரித வோட்டர் ஹீட்டர்




MSH708P
சாதாரண விலை ரூ. 107,990
தள்ளுபடி ரூ. 28,000
சேல் விலை ரூ. 79,990

Abans
பிரெஷர் குக்கர்



3L முதல் 12L வரையான கொள்ளளவுகளில் பெற்றிடுங்கள்.
சாதாரண விலை ரூ. 10,990 இலிருந்து
தள்ளுபடி ரூ. 1,500 இலிருந்து
சேல் விலை ரூ. 9,490 இலிருந்து

Abans mistral
இலெக்ட்ரிக் அவன்



கொள்ளளவுகள் 23L, 25L, 30L, 32L, 33L, 38L, 45L
சாதாரண விலை ரூ. 30,990 இலிருந்து
தள்ளுபடி ரூ. 11,000 இலிருந்து
சேல் விலை ரூ. 19,990 இலிருந்து

mistral
ஃபுட் புரொஸசர்



MFP120
சாதாரண விலை ரூ. 34,990
தள்ளுபடி ரூ. 5,000
சேல் விலை ரூ. 29,990

Abans
குக்கர் டேபல் டொப்



ABCKTT26HGR
சாதாரண விலை ரூ. 34,990
தள்ளுபடி ரூ. 13,000
சேல் விலை ரூ. 21,990

HNB Cards, COMMERCIAL BANK, BOC CARDS, Sampath Cards, HSBC, standard chartered, SEYLAN, NDB bank, DFCC BANK


0115 999 000

Abans

(சி-1888)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் காலை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் ஆரம்பமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின்அலுவலகத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டக் கட்சியின் தலைவர் மாவைசோ. சேனாதிராஜா தலைமையில் ஆரம்பமாகியது.

இக்கூட்டத்தில் கட்சியின் பதில் செயலாளர் ப. சத்தியலிங்கம், சிரேஷ்ட உபதலைவர் சி.வி.கே. சிவஞானம், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், நிருவாகக்குழு மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கட்சிக் கொடி தமிழரசுக் கட்சியின் தலைவரினால் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இராசமாணிக்கம் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது. (4-33)



"ஜெம் புறஜெக்ற்" திட்டத்தின் கீழ் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் மாணவர்கள் பாவனைக்காக போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப் பட்டது. (படம்-மகாலிங்கம்)



மைக்கல் விளையாட்டு கழகம், மக்கள் நேசக்கரம் மண்ணின் மைந்தர்கள் நினைவாக நடத்தும் இரத்தான முகாம் நேற்று அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழக மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்-மகாலிங்கம்)


## VN அக்கடமி நடத்தும்

### வெற்றி முரசு (சண்டிலிப்பாய்)

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை–01 பெறுபேறுகள்

| மாணவர் பெயர் | புள்ளி | நிலை |
|---|---|---|
| 1. பா.ஹன்சிகா (ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை) | 157 | 1 |
| 2. ர.டினுசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) | 155 | 2 |
| 3. சி.அபிசனா (ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை) | 141 | 3 |
| 4. இ.டேனுகா (ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை) | 140 | 4 |
| 5. கோ.ஜின்சன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) | 132 | 5 |
| 6. தி. கஜிந்தன் (சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலை) | 127 | 6 |
| 7. இ. கிருசிகன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) | 119 | 7 |
| 8. நி.ஹரிகிறிஷ் (அருணோதயக் கல்லூரி) | 118 | 8 |
| 9. உ. சுதேஸ் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) | 113 | 9 |
| 10. ர. டிருஜனன் (ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை) | 110 | 10 |

வெற்றிமுரசு பரீட்சை - 02
22.01.2023 (ஞாயிறு) காலை 10 மணி
இடம்- சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்
தொடர்பு- V.கஜரூபன், 077 500 5861

(சி-5751)


## சர்வதேச திரைப்பட விழா இறுதிநாள் இன்று

(யாழ்ப்பாணம்)

8 ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு திவ்யா கர்னாரே என்பவரின் 15 செக்கண்ட் லைப் ரைம் என்கின்ற இந்திய ஆவணப்படத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் மாலை 6 மணியளவில் 8 ஆவது சர்வதேச திரைப்படவிழாவினது விருது வழங்கலும் இறுதித் திரைப்படத் திரையிடலும் யாழ்ப்பாணம், கார்கில்ஸ் சதுக்கல் அமைந்துள்ள றீகல் சினிமாவில் நிகழும்.

இக்காட்சிகள் அனைத்தும் இலவசம். சினிமா ரசிகர்கள் அனைவரையும் இக்காட்சிகளில் பங்குபற்றி, திரைப்படங்களினைப் பார்த்து மகிழுமாறு விழாக் குழுவினர் அழைத்து நிற்கின்றனர். (4)

## வீட்டின் மீது சரிந்த தென்னை மரம்



(அராலி)

யாழ்ப்பாணம் அனலை தீவு மூன்றாம் வட்டாரத்தில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் தென்னை மரம் சரிந்ததில் வீடு பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

எனினும் வீட்டில் இருந்தவர்களுக்கு தெய்வாதீனமாகப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. (4-104)

## கசிப்புடன் இருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிலாவரை மற்றும் பொய்ஸி பகுதிகளில் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒருவரிடமிருந்து 6 போத்தல் கசிப்பும் மற்றையவரிடமிருந்து 14 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் 42 மற்றும் 43 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்டவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# இராசிபலன்

08.01.2023
மார்கழி 24, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை காலை 7.02 மணிவரை
பூசம் பின்னிரவு 5.52 மணிவரை

சுபநேரம் 9.32-11.02 மணிவரை
இராகுகாலம் 5.02-6.32 மணிவரை
திருக்காட்சி ஞாயிறு

சந்திராஷ்டமம் - பூராடம்

வளவன்


மேஷம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு.


ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காண வேண்டிய நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.


மிதுனம்

வழிபாடு காரிய வெற்றி தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நாவண்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.


கடகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.


சிம்மம்

தேவையற்ற மன சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனக் குறைவான நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.


கன்னி

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, யோக


துலாம்

எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


தனுசு

எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும்.


மகரம்

நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.


மீனம்


பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

அஞ்சாமையை விட நேர்மையாக இருத்தலே அழகானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 378
Viber 076 636 3378





• அபிமன்யு



> தமிழினத்துக்கான தீர்வு விடயத்தில் யார் குற்றினாலும் அரிசி ஆகட்டும் என்ற அசண்டையீனம் வேண்டாம். தமிழ்த்தரப்புகள் அனைத்தும் ஒற்றுமையாய் நிற்பதையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

# அரசுடனான சந்திப்பை அர்த்தமுள்ளதாக்குங்கள்

அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் அரசின் தற்போதைய நிலைப்பாடு எவ்வாறு உண்டு என்ற கேள்வி தமிழ் மக்களிடத்தில் எழுந்துள்ளது.

தமிழினத்துக்கான அதிகாரப்பகிர்வுக்கு நான் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்ததுடன் தமிழ்க்கட்சிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெரிவித்திருந்தாரே தவிர அதற்கான எந்த நடவடிக்கைகளும் நடந்ததாய் இல்லை.

மாறாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பை திரும்பத் திரும்ப ஜனாதிபதி சந்திப்பதன் சூட்சுமத்தை அறிய முடியவில்லை.

தமிழினத்துக்கான தீர்வு விடயத்தில் தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு விடக்கூடாது என்பதில் அரச தரப்பு தீவிரம் காட்டுகிறதோ என்னும் ஐயம் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ளது. அதைப் பறைசாற்றும் விதமாக இரண்டு முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி மூன்றாவது தடவையாகவும் எதிர்வரும் 10 ஆம் திகதி கூட்டமைப்பினரைச் சந்திக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கு நாம் வேறு ஒரு விடயத்தையும் உற்று நோக்க வேண்டும்.

அதாவது தமிழ்த்தரப்புக்களைத் தவிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மை முன்னிலைப்படுத்துகின்றதோ என்பதே அதுவாகும்.

இது எவ்வாறான விடயம் எனின், மரண வீடு என்றால் நாம் தான் பிணமாக இருப்போம். திருமண வீடு என்றால் நாம் தான் மாப்பிள்ளையாக இருப்போம் என்பதற்கு ஒப்பானதாகும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அனைவரும் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளும் முகமாக தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து சந்திப் பொன்றை மாவை சேனாதிராஜாவின் தலை மையில் அண்மையில் நடத்தியிருந்தது.

இச்சந்திப்பு தமிழினத்தின் ஒற்றுமைக்கான அத்திபாரமாக அமையுமென மக்கள் விரும்பினர். அதை வரவேற்கவும் செய்தனர். நிலை இவ்வாறு இருக்கையில், அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பிரித்தாளப் பார்க்கிறதோ என்ற ஐயம் தமிழ் மக்களிடம் எழவே செய்தது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும் போது,

ஜனாதிபதியுடனான சந்திப்புக்களினூடாக எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லையெனின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபடுவது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே சந்திப்பு நடத்தியபோது அரசியல் கைதிகளின் விடுதலை, அபகரிக்கப்பட்ட தமிழர்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பில் பேசியிருந்தோம்.

இதையே மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். அரசு இதற்கு சாதகமான பதிலைத் தராவிடின் தொடர்ந்து அரசை சந்திப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிப்போம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை இப்போதுதான் முதன் முறையாக சந்திப்பது போல கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

எத்தனை அரசாங்கங்களிடம் கூட்டமைப்பு இவ்வாறு ஏமாந்து போனது என்ற உண்மையை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

தமிழினத்திற்கான தீர்வு ஒன்று வந்தால் அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் மாத்திரமே கிடைக்க வேண்டும் என்ற பிரம்மையில் நின்றாடுவது மிகத் தெளிவாகப் புலப்பட்டு நிற்கிறது.

ஏனைய தமிழ்க் கட்சிகளைத் தவிர்த்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று வென்று விடலாம் என நினைப்பது பாரிய மடமைத்தனமான செயல் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதற்கு பிள்ளையார் சுழி இட்டது போல நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அதாவது அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஏனைய கட்சிகளின் கருத்துக்களைக் கேட்டறிவது அவசியம் எனத் தெரிவித்திருந்தார்.

இனவாத சிங்கள கட்சிகளிடம் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் பேசினால் அது எவ்வாறான விளைவுகளைத் தருமென்று ஜனாதிபதி ரணில் அறிந்திராதவர் அல்ல.

அடடா என்ன இது நன்றாகப் போய்க் கொண்டிக்கிறதே என தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் நேரத்தில் ஜனாதிபதியின் பேச்சு “அதுவும் போச்சா” என்ற வடிவேலுவின் பேச்சுப்போல ஆகிவிட்டது.

தமிழினத்துக்கான தீர்வு விடயத்தில் “யார் குற்றியும் அரிசியானால் சரி” என இருந்து விடுவது மகா தவறு. முதலில் நாம் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவை அனைத்தையும் விட தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் போல வேறு எப்போதும் எமக்குக் கிடைக்காது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே வெட்டி ஓடும் அர்சியலைத் தவிர்த்து தமிழ் மக்களின் விருப்பம் போல ஒன்றுபட்டு நின்று எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதே பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்குரிய திகதியை தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்குது. அப்ப இனி எங்கட தமிழ் அரசியல்வாதிகள் துள்ளி எழுந்திருப்பினம் எண்டு நினைக்கிறன்.

**பண்டிதர்:** அப்ப எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே, என்று திருப்பள்ளி எழுச்சி பாடுகிற மார்கழி மாதத்திலதான் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் அறிவித்திருக்கினம்.

**கங்காணி:** அதுசரி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்கக்கூடிய சாத்தியம் இருக்குதோ.

**விதானையார்:** தேர்தலை நடத்துறதுக்கு அரசாங்கத்திட்டக் காசில்லை எண்டு சொல்லுகினம். ஆனாலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையாவது நடத்தாவிட்டால், நாட்டில மீண்டுமொரு மக்கள் கிளர்ச்சி ஏற்படலாம்.

**மூப்பர்:** உள்ளூராட்சி சபைத் தேர்தலையாவது நடத்த வேணும் எண்ட ஒரு நினைப்பு அரசாங்கத் திட்ட இருக்கத்தான் செய்யுது.

**சிறாப்பர்:** அதுசரி, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு எங்கட தமிழ்க் கட்சிகள் ரெடியாக இருக்கினமோ.

**கங்காணி:** ஏற்கனவே பிரதேச சபைத் தேர்தலில களமிறங் கினவியளின்ர பெயர்ப்பட்டியல் இருக்குத்தானே. அதில இலாப, நட்டக் கணக்கைப் பார்த்திட்டு பட்டியலைக் கொடுக்கிறதுதானே.

**விதானையார்:** ஓ! இப்ப ஒரு ஆளும் ஒரு பெயரும் இருந்தால் போதும். அவர் மக்கள் சமூகத்தோட சேர்ந்து செயற்படக் கூடியவரா? அவருக்கு மக்கள் செல்வாக்கு இருக்குதா? எண்ட விபரங்கள் ஒண்டும் பார்க்கிறதில்லைத் தானே!

**சாத்திரியார்:** தேர்தலை மையப்படுத்திச் செயற்படுகிற அரசியல் கட்சிகள் எப்பவும் தங்கட நலனைத்தான் பார்ப்பினம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேர்தல் அரசியலில ஈடுபடாத அரசியல் கட்சி ஒன்றேனும் பலமாக இருந்திருக்க வேணும்.

எங்கட துரதிர்ஷ்டம் அப்படியொரு அரசியல் கட்சியும் இல்லாமல் போயிற்று.

**வாத்தியார்:** சரி... சரி...உள்ளூராட்சி சபைத் தேர்தல் இப்போதைக்குச் சூடுபிடிக்குமெண்டு நான் நினைக்கல்ல. அப்படி தேர்தல் நடந்தால் அதை அந்த நேரம் பார்ப்பம். இப்ப, எங்கட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில அரசாங்கம் எந்தளவு தூரம் வெற்றியடையும் என்பதைத்தான் நாங்கள் கவனிக்க வேணும்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். ஆனால் அரசியல் தீர்வு தொடர்பில தமிழ் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருக்கினம்.

**கங்காணி:** கடந்த காலங்களில நடந்த ஏமாற்றங்கள் தமிழ் மக்களை அமைதிப்படுத்தியிருக்குது எண்டுதான் நான் நினைக்கிறன்.

**சிறாப்பர்:** கங்காணியார் சொல்லுறது உண்மைதான். அதேநேரம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று வரும் போதெல்லாம் அதனைத் தமிழ் அரசியல் கட்சிகள் பார்த்துக் கொள்ளும் என்ற நினைப்பில எங்கட தமிழ் மக்கள் மௌனமாக இருக்கிறது வழமை. அந்த அடிப்படையிலதான் தமிழ் மக்களின்ர மௌனத்தை நான் பார்க்கிறன்.

(இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஆலடியில் சிறிதுநேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்).

**விதானையார்:** எந்த வகையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேணும் என்பதில சிங்கள அரசியல் தரப்புகள் உறுதியாக இருக்கினம். அதேநேரம் பொருளாதார நெருக்கடியால மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ள சிங்கள மக்களும் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தி நிற்கினம். அதேசமயம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், பொருளாதார நெருக்கடியில இருந்து நாட்டை மீட்க முடியாதென்பது நிறுத்திட்டமான உண்மை என்பதை பௌத்த பீடங்களும் சிங்களப் புத்திஜீவிகளும் கடுமையாக உணர்ந்திருக்கினம்.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற இந்த நேரத்தில முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் வீட்டிற்குத் தேடிச் சென்று சந்தித்திருக்கிறார். இது உண்மையிலேயே ஓர் ஆச்சரியமான நிகழ்வு.

இந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்து போர் நடத்திய ஒருவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரைச் தேடிச் சென்று சந்தித்து இனப்பிரச்சினைக்கான முயற்சிக்கு ஆதரவு வழங்குவம் என்று கூறியதை ஒரு சாதாரண விடயமாக நாங்கள் பார்க்கக்கூடாது.

**வாத்தியார்:** இங்கதான் பண்டிதர் ஐயா ஒரு விடயத்தை நாங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேணும். அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சம்பந்தரைத் தேடிச் சென்று சந்தித்தாரென்றால், இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் அது ராஜபக்ஷ தரப்புக்கு இன்னமும் இடைஞ்சலாக அமையும் என்பது ஒரு விடயம். அடுத்த விடயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால இனப்பிரச்சினைக்கான முயற்சி நடந்தது என்றிருக்காமல், எங்களாலதான் ஜனாதிபதி ரணில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கிறார். ஆகையால இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டால், அதற்கு நாங்கள் தான் மூலகாரணம் என்பதை உறுதிப்படுத்துவது.

இது தவிர, சிங்கள மக்கள் தங்களை எந்தக் காலத்திலும் தூக்கித் துதி பாடுவினம் என்ற இறுமாப்பில இருந்த மகிந்த உள்ளிட்ட ராஜபக்ஷ தரப்பிற்கு சிங்கள மக்கள் புகட்டின பாடம் ஏழு பிறப்பிலும் மறக்க முடியாதது.

ஆகையால தாங்கள் தமிழ் மக்களுக்குச் செய்தது பெரும் துரோகம் என்ற உறுத்தலாலயும் மகிந்த ராஜபக்ஷ சம்பந்தரைச் சந்தித்திருக்கலாம்.

**விதானையார்:** சம்பந்தரை மகிந்த சந்தித்ததற்குப் பல காரணங்களை வாத்தியார் கூறினார். ஆனால் என்னைப் பொறுத்தவரை; அன்று தொடக்கம் இன்றுவரை மகிந்த ராஜபக்ஷவுடனும் ராஜபக்ஷ தரப்புடனும் சம்பந்தர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

எப்படியும் தான் உயிரோட இருக்கும் போது இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட வேணும் எண்ட ஆதங்கம் சம்பந்தர் ஐயாட்ட இருந்தது. இதுபற்றி அவர் மகிந்தவுக்கும் சிலபல சந்தர்ப்பங்களில சொல்லி வைத்திருக்கிறார். அதிலும் மகிந்த ஜனாதிபதியாக இருக்கும் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் எண்ட நம்பிக்கை சம்பந்தரிட்ட இருந்தது. ஆனால் சம்பந்தரின்ர நம்பிக்கைய-எதிர்பார்ப்பை, தான் நிறைவேற்றி வைக்கவில்லை என்ற மன ஆதங்கத்திலும் மகிந்த சம்பந்தரைச் சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு நாங்கள் பூரண ஆதரவு வழங்குவோம் எண்ட உறுதிமொழியைக் கூறி இருக்கலாம்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



சம்பந்தரை தேடிச் சென்று சந்தித்த மகிந்த ராஜபக்ஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூண்டு கிளிக்குப்பின் எம்.ஜி.ஆரும் சிவாஜியும் ஏன் இணைவில்லை வியாசரே?

**ரமேஷ் கிளிநொச்சி**

**திருவள்ளுவர் வாழ்ந்த காலம் பொற் காலம். நாம் வாழ்வதோ போதைக்கு அடிமையான காலம். இப்போது திரு வள்ளுவர் இருந்திருந்தால் போதை ஒழிப்புக்கு நிறைய குறள் எழுதியிருப் பாரே?**

'கள்ளுண்ணாமை' என்கின்ற அதிகாரத் தில் குறள் 921 இல் இருந்து 930 வரை குறித்த 10 குறளும் கள்ளுண்ணாமை குறித்தே பேசப்படுகிறது.
திருவள்ளுவர் வாழ்ந்த காலத்திலும் கள்ளுண்ணும் பழக்கமுடையவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.
ஆனாலும் அன்றைய காலங்களை விட மிக மிக மோசமான செயல்கள் எம் சமூகத்தில் தற்போது நடந்து கொண்டிருக்க காரண மானது இந்தப் போதை.
இதை ஒழிக்க வேண்டும்.இல்லையேல் திரு வள்ளுவர் கூறியது போல போதை இந்த உலகை அழித்துவிடும்.

**இதழினி புலோலி**

**வாழ்க்கையில் பல போராட்டங்களை எதிர்கொண்டு சாதிக்க முயலும் தருணம் அனைத்தும் கைநழுவிப் போய் விடுகிறதே?**

எம்மில் பலரிடம் இருக்கும் பெரிய பிரச்சினை இதுதான்.
ஏதோ நாம் பெரிதாக முயற்சித்துவிட்டதாயும் அதில் நாம் தோல்வி கண்டதாயும் நொந்து கொண்டு, மீண்டும் முயற்சிக்காமல் மூலையில் முடங்கிக் கிடப்பது முட்டாள்தனமானது.
மீன் உண்பதற்கு ஆசைப்பட்டால் அதில் இருக்கும் முள்ளை அப்புறப்படுத்திவிட்டுத் தான் உண்ண வேண்டும்.
இல்லையெனில் முள் எம் தொண்டையில் சிக்கிவிடும்.
இதைப் புரிந்து கொண்டு நடப்பதுதான் வாழ்வை வெற்றி கொள்ளும் இரகசியம்.

**மதுவன் மீசாலை**

**கூண்டுக்கிளி திரைப்படத்திற்குப்பின் எம்.ஜி.ஆரும் சிவாஜியும் ஏன் இணையவில்லை வியாசரே?**

எம்.ஜி.ஆரும் சிவாஜியும் ஒரேநேரத்தில் மிக உச்சத்தில் இருந்த நடிகர்கள்.
ஒருவர் மக்கள் திலகம்.மற்றவர் நடிகர் திலகம்.
இந்த இரண்டு திலகங்களையும் கூண்டுக் கிளியில் அடைத்து அழகு பார்த்தார்கள்.
ஆனாலும் இரு கிளிகளும் கூட்டைத் திறந்து கொண்டு வேறுவேறு திசையை நோக்கிப் பறந்து விட்டன.
ஆயினும் இரு திலகங்களின் சங்கமமான அந்தக் கூண்டுக்கிளி இன்னமும் ஒற்றுமை என்பதை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுந்தரம் பருத்தித்துறை**

**காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பெற் றோரை வெறுத்து தற்கொலை செய்த தன் காதலியின் இறந்த உடலுக்கு தாலி கட்டிய காதலன் பற்றி?**

மட்டக்களப்பில் நடந்த இந்தச் செய்தியைப் படிக்கும் போது அடடா இந்தக் காலத்தில் இப் படி ஒரு காதலா என்று எண்ணி உருகினேன்.
உண்மை அன்பென்பது இறுதிவரை எம் உறவுக்கு உண்மையாய் இருப்பதுதானே.
அந்த வகையில் அந்தக் காதலன் தன் காதலுக்கு உண்மையாய் இருந்துள்ளான் என்பதில் சிறப்பு.

**தாரா வதிரி**

**காதல் வாழ்வா, திருமண வாழ்வா? மிக சுவாரஸ்யமானது வியாசரே?**

காதல் வாழ்வு என்பது மாதக் கலண்டரைப் போன்றது. ஒவ்வொரு பக்கமும் மனதுக்கு இதம் தரும் வர்ணங்களைக் கொண்டிருக்கும்.
திருமண வாழ்வென்பது ஒவ்வொரு நாளும் கிழிக்கும் நாள் கலண்டரைப் போன்றது.
கறுப்பு,வெள்ளை மட்டுமே அதில் இருக்கும்.
என்ன செய்வது நாம் வாழ்வில் எவ்வளவு தான் குத்தி முறிந்தாலும் இறுதியில் எமக்குக் கிடைப்பது என்னவோ கறுப்பு, வெள்ளைக் நாள் கலண்டரே.



திருவள்ளுவர் வாழ்ந்த காலம் பொற் காலம் நாம் வாழ்வதோ போதைக்கு அடிமையான காலம். இப்போது திரு வள்ளுவர் இருந்திருந்தால் போதை ஒழிப்புக்கு நிறைய குறள் எழுதியிருப்பாரே?

**சுதன் குப்பிழான்**

**கூட்டமைப்பின் தலைவர்களுக்கு முன் னாள் ஜனாதிபதி மகிந்த பொன்னாடை போர்த்தியது ஏன் வியாசரே?**

மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முடியுமா?
இல்லை அல்லவா?
ஆனால் எம் அரசியல் தலைவர்கள் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது எப்படி என ஒரு தியறியையே வைத்திருக்கிறார்கள்.
எல்லாம் அந்த தியறியின் வேலை தான் இது.
தேர்தல் நாடகம் தொடங்கப் போகிறது அல்லவா? இனி இவ்வாறான அதிசயங் கள் மிகப் பலமாக நடக்கும். அதற்கு எம்மை நாம் பழக்கப்படுத்திக் கொள்வது நல்லது.

**அகிலன் கனகராயன்குளம்**

**பெண்கள்,சிறுவர்களை துஷ்பிர யோகம் செய்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?**

ஒரு தவறுக்கான தண்டனை அடுத்தவன் அதே தவறைச் செய்ய விடாது இருப்பதாய் இருக்க வேண்டும்.
அப்படி தவறு செய்தவனுக்கு தகுந்த தண்டனை வழங்கும் காலத்தை நாம் தாண்டி வந்துவிட்டோம்.
14 ஆண்டுகள் கடந்து விட்டன. அவ்வா றான பொற்காலம் இனி எப்போது வந்து விடப் போகிறது என ஒவ்வொரு பெற் றோர்களும் ஏங்கித் தவிக்கிறார்கள்.
தவறுகளுக்கு தண்டனைகள் பாடமாக இக்க வேண்டும். அப்போது தான் தவறுகள் குறையும்.

**மோகன் கொக்குவில்**

**பணத்துக்காக நாசகார வேலை செய்பவர்கள் அரசியலுக்கு வந்து ஜன நாயகத்தை மீட்பார்களா வியாசரே?**

தற்போதைய அரசியல் என்பதெல்லாம் மக்களுக்கானதோ மக்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கானதோ அல்ல.
இருக்கும் தங்கள் சொத்தை எப்படிப் பாதுகாப்பது. கூடவே அதை இன்னும் பல மடங்காக்குவது எப்படி என்ற நோக்கம் கொண்டதே.
இவர்கள்தான் சிறுபான்மை இனத்தின் மீட்பர்கள் என தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டி அடைமொழி வைத்து அலை ந்து திரிகிறார்கள்.
சொன்னால் வெட்கம் சொல்லாவிட்டால் துக்கம் அவ்வளவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: நாடோடி
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்



கடவுள் செய்த பாவம்
இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம்
மனிதன் கொண்ட கோலம்

கடவுள் செய்த பாவம்
இங்கு காணும் துன்பம் யாவும்...

பொருளேதுமின்றி கருவாக வைத்து
உருவாக்கி விட்டுவிட்டான்
அறிவென்ற ஒன்றை மரியாதை இன்றி
இடம் மாற்றி வைத்து விட்டான்
பொருளேதுமின்றி கருவாக வைத்து
உருவாக்கி விட்டுவிட்டான்
அறிவென்ற ஒன்றை மரியாதை இன்றி
இடம் மாற்றி வைத்து விட்டான்

கடவுள் செய்த பாவம்
இங்கு காணும் துன்பம் யாவும்...

நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
புழுகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே
புழுகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே

முகத்துக்கு நேரே சிரிப்பவர் கண்கள்
முதுகுக்கு பின்னால் சீறும்
முகஸ்துதி பேசும் வளையும் குழையும்
காரியமானதும் மாறும் காரியமானதும் மாறும்

கடவுள் செய்த பாவம்
இங்கு காணும் துன்பம் யாவும்...

கொடுப்பவன் தானே மேல் ஜாதி
கொடுக்காதவனே கீழ் ஜாதி
கொடுப்பவன் தானே மேல் ஜாதி
கொடுக்காதவனே கீழ் ஜாதி
படைத்தவன் பேரால் ஜாதி வைத்தான்
பாழாய்ப்போன இந்த பூமியிலே
படைத்தவன் பேரால் ஜாதி வைத்தான்

பாழாய்ப்போன இந்த பூமியிலே
நடப்பது யாவும் விதிப்படி என்றால்
வேதனை எப்படி தீரும்?
நடப்பது யாவும் விதிப்படி என்றால்
வேதனை எப்படி தீரும்?
உடைப்பதை உடைத்து வளர்ப்பதை வளர்த்தால்
உலகம் உருப்படியாகும் உலகம் உருப்படியாகும்

கடவுள் செய்த பாவம்
இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம்
மனிதன் கொண்ட கோலம்

## மகாபாரதம் மறைமுகமாய் பேசுகின்ற சமஷ்டியும் சுயாட்சியும்

மனித வாழ்வின் அகம். புறம் சார்ந்த அனைத்து வாழ்வியல் கோட்பாடுகளையும் அதனுடன் இணைந்த தத்துவங்களையும் கற்றுத் தரும் ஒரு இதிகாசமாக மகாபாரதம் முக்காலங்களிலும் ஒரு தெளிந்த நீரோடை போல் விளங்கி வருகின்றது.

அது ஆன்மிகம், அரசியல், வாழ்வியல், போரியல், கர்மம், பக்தி, ஞானம், மனித ஆன்மா என மனிதன் வாழ்வதற்குரிய அனைத்து அடிப்படைத் தளங்களிலும் நின்று அலசுகின்றது.

மகாபாரதம் அகம் சார்ந்த ஆன்மாவையும் புறம் சார்ந்த அரசியலையும் என்றும் மாற்ற முடியாத மனித குலத்தினுடைய முக்கிய இலக்காகக் கொண்டு நெடுந்தூரம் பயணிக்கின்றது.

இன்று சமகாலத்தில் உலகெங்கும் உள்ள பல அரசியல் ஆய்வாளர்களால் நவீன அரசியலின் சொற்பதமாக விவாதிக்கப்பட்டு வரும் ஒடுக்கப்படும் ஒரு இனத்தினுடைய கௌரவமான சமஷ்டியையும் (கூட்டாட்சி) மற்றும் சுயாட்சியையும் மகாபாரதம் மறைமுகமாய் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே பாண்டவர்கள் ஊடாக பேசியிருக்கின்றது.

வனத்திலே பாண்டவர்களின் தந்தையான பாண்டுவின் மரணத்தில் இருந்து அஸ்தினாபுரத்தின் எல்லை நோக்கி மெல்லமெல்ல எதிரொலிக்க ஆரம்பிக்கின்றது பாண்டவர்களினுடைய அரசியல் அதிகாரத்துக்கான முன்மொழிவுகளுடன் கூடிய அழுத்தமான உரிமைக் குரல்கள்.

முடிக்குரிய இளவரசனான பாண்டவர்களின் தலைமகன் தர்மனை யுவராஜனாக்கி அவனுடன் என்றும் இணைந்த கைகளாக துரியோதனன் உட்பட கௌரவர்கள் அனைவரையும் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுக்குமாறு அஸ்தினாபுரத்தின் நிரந்தரமான இரட்சகர் பிதாமகன் பீஷ்மர் அழைப்பு விடுக்கின்றார் அமைச்சர் விதுரரோடு சேர்ந்து.

ஏனென்றால் அஸ்தினாபுரம் என்றும் பிளவுபடாத ஒரு தேசமாக நிலைத்து இருப்பதற்கு நவீன அரசியல் சொற்பதமான கூட்டாட்சி முறை எனப்படுகின்ற சமஷ்டி ஒரு பாதுகாப்பான வேலியாக இருக்கும் என்ற நம்பிக்கையில். அன்றே பீஷ்மர் மற்றும் விதுரரின் சிந்தனைகள் அவர்களை அறியாமலேயே இன்றைய சமஷ்டி என்ற பதத்தை நோக்கி திரும்பியது.

சமஷ்டி என்பது எதிரெதிரே இரு துருவங்களாக இருக்கும் இரண்டு அரசியல் சமூகம் சார்ந்த தரப்புக்களும் தங்களுக்குள் ஆட்சியதிகாரங்களை சமமாக பகிர்ந்து கொள்ளும் ஒரு அரசியல் முறைமையாகும். இரண்டு தரப்புக்களில் ஒரு தரப்பானது தீமையானதாக இருந்து விட்டால், சமஷ்டி தீர்வுத் திட்டமானது பெரும் பின்னடைவுக்கு உள்ளாகி விடும். மகாபாரதத்திலும் அதுவே நடந்தது.

ஆனால் சமஷ்டி ரீதியிலான ஒரு அதிகார பகிர்வை யாருடன் பாண்டவர்கள் பங்கிட்டுக் கொள்ளப் போகின்றார்கள் என்பதில் பீஷ்மரும் விதுரரும் தெளிவற்றவர்களாகவே இருந்துள்ளார்கள் என்பதை அதற்கு பின் நடந்த பாண்டவர்களுக்கு எதிரான அரசியல் சூழ்ச்சிகளே பறைசாற்றி நிற்கின்றது. தர்மரின் யுவராஜ பட்டாபிஷேகமானது மெல்ல நகர்ந்து வாரணாவத நகரின் அரக்கு மாளிகையின் தீ மூட்டலுக்கு உள்ளாகி தெய்வீக சங்கல்பத்தினால் பாண்டவர்கள் ஐவருடன் தாய் குந்திதேவியும் தப்பிக்கின்றார்கள். தங்களுக்கு நாட்டினுடைய ஆட்சியதிகாரங்கள் வேண்டாம் என வனத்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ முற்படுகின்றார்கள்.

அரசியல் ரீதியிலான சில இராஜதந்திர வியூகங்களை வகுப்பதற்காக காலத்தின் தேவை கருதி பாஞ்சாலியின் சுயம்வரத்தில் பாண்டவர்கள் தங்களை மீண்டும் உலகுக்கு வெளிப்படுத்துகின்றார்கள். அங்கிருந்துதான் சுயாட்சிக்கான பிள்ளையார் சுழி மீண்டும் அஸ்தினாபுரத்தின் ராஜ சபை நோக்கி நகருகின்றது.

என்றும் பிளபுபடாத அஸ்தினாபுர சாம்ராஜ்ஜியம் எல்லைக் கோடுகள் நிர்ணயிக்கப்பட்டு பாதி ராஜ்ஜியமாக பிளவுபட்டு இந்திரப்பிரஸ்தம் என்ற பெயரில் உருவெடுக்கின்றது. இருந்தும் படைகளை திரட்ட முடியாத யுத்த அறை கூவல்கள் விட முடியாத என்றும் அஸ்தினாபுரத்துக்கு கட்டுப்பட்ட ஒரு அரை குறை இறையாண்மை கொண்ட ஒரு சுயாட்சியாகவே பாண்டவர்களின் கரங்களில் அது ஒப்படைக்கப்படுகின்றது.

சுயாட்சி அரசியல் முறைமையில் அஸ்தினாபுர பேரரசு இரண்டாக பிளவுபட்டபோது. அஸ்தினாபுர மக்கள் இந்திரப்பிரஸ்தத்தை நோக்கி குடியுரிமை பெறுவதற்காக ஓடினார்கள். இது பாண்டவர்களின் ஆட்சியல்ல உண்மையில் மக்களாகிய தாங்கள் ஒவ்வொருவரும் விரும்புகின்ற சுயாட்சியை பாண்டவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

கிருஸ்ண பரமாத்மா பாண்டவர்கள் மீது கொண்ட அளவிட முடியாத பேரன்பினால் இந்திரப்பிரஸ்தத்தை பேரரசு ஆக்கி தர்மனை சக்கரவர்த்தி ஆக்குவதற்கும் அஸ்தினாபுரத்தின் ஆளுகைக்குள் இருந்து விடுபடுவதற்கும் அசுவமேத யாகம் செய்யுமாறு உத்தரவு இடுகின்றார்.



யாகம் வெற்றி பெறுகின்றது. தர்மன் சக்ரவர்த்தி ஆகின்றான்.

கௌரவர்களின் தலைவன் துரியோதனன் பாண்டவர்களின் மாபெரும் சுயாட்சியைக் கண்டு அளவிட முடியாத துக்கத்துக்கு ஆளாகின்றான். இந்திரபிரஸ்தத்தின் மீது பொறாமை கொண்டு யுத்தத்தில் வெல்ல முடியாத பாண்டவர்களை சூழ்ச்சியால் வெல்வதற்கு தனது தாய் மாமன் சகுனியின் உதவியைக் கொண்டு பாண்டவர்களை நிபந்தனையுடன் சூதாட அழைக்கின்றான்.

சூதாட்டத்தில் சக்கரவர்த்தி தர்மன் தேசத்தை மட்டுமல்ல தனது சகோதரர்கள் உட்பட தன் மனைவி பாஞ்சாலியையும் சேர்த்து இழக்கின்றான். சமஷ்டியைத் தொடர்ந்து சூதாட்டத்தில் சுயாட்சியும் முற்றாக இழக்கப்பட்டு அல்லது அபகரிக்கப்பட்டு பாண்டவர்கள் கடும் நிபந்தனையுடன் வனத்துக்குள் துரத்தப்படுகின்றார்கள்.

பன்னிரெண்டு வருடம் வனவாசம். ஒரு வருடம் அஞ்சாத வாசம் முடிந்த பின் தங்கள் சுயாட்சியை இந்திரபிரஸ்தத்தில் மீண்டும் நிலைநிறுத்தி கொள்வதற்காக பாண்டவர்கள் விராடத் தேசத்திலே தங்கி இருக்கின்றார்கள். கிருஸ்ண பரமாத்மா மூலம் கௌரவர்களுக்கு தூதுச் செய்தி செல்கின்றது.

கிருஸ்ணன் கௌரவர்களின் யுவராஜனான துரியோதனனிடம் பாண்டவர்களுக்காக ஐந்து கிராமங்களை கேட்கின்றான் மறுக்கப்படுகின்றது. ஐந்து ஊர்களையாவது கேட்கின்றான் அதுவும் மறுக்கப்படுகின்றது. ஊசி முனை நிலம் கூட பாண்டவர்களுக்கு கிடைத்து விடக் கூடாது என்பதில் கௌரவர்கள் குறியாக இருந்தார்கள்.

ஏனெனில் ஊசி முனை நிலம் கூட பாண்டவர்களுக்கு கிடைத்து விட்டால் மக்களின் விருப்பப்படி மீண்டும் சுயாட்சியை பெற்று சுதந்திரம் அடைந்து விடுவார்கள். அப்படி சுதந்திரம் அடைந்து விட்டால் அஸ்தினாபுரம் மீண்டும் இந்திரப்பிரஸ்தத்துக்கு எப்போதும் கட்டுண்ட தேசமாய் போய் விடும் என்பதே அவர்களின் வஞ்சப் புத்தியாய் இருந்தது.

பாண்டவர்களுடன் ஆட்சியதிகாரங்களை சமஷ்டி முறையில் பகிரவும் விருப்பமில்லை. அவர்களை சுயாட்சி முறையில் ஒரு தனியரசாக தனித்து இயங்கவிடவும் விருப்பமில்லாமல் கௌரவர்கள் அனைவரும் பாண்டவர்களை வேரோடு அழிக்கவே உறுதி பூண்டார்கள்.

ஆனால் கிருஸ்ணனின் தெய்வீக சங்கல்பமானது பாண்டவர்களுக்கு சார்பாக இருந்தபடியால். யுத்தத்தில் பல போரியல் வியூகங்கள் வகுக்கப்பட்டு கௌரவர்கள் அடியோடு துடைத்து அழிக்கப்படுகின்றார்கள்.

அதன்பின் இந்திரபிரஸ்தம் அஸ்தினாபுரத்துடன் மீண்டும் இணைக்கப்பட்டு என்றும் பிளவுபடாத ஒருங்கிணைந்த அஸ்தினாபுரமாக மக்கள் விரும்பிய மாபெரும் சுயாட்சி அடிப்படையில் பாண்டவர்களால் பேரரசாக ஆளப்பட்டது. இதுவே மகாபாரதம் மறைமுகமாக பேசி நிற்கின்ற சமஷ்டியும் சுயாட்சியும் ஆகும்.

**சாம் - ரமேஸ்குமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேக் டான்ஸ் இனி ஒலிம்பிக் விளையாட்டு!

விளையாட்டுக்கென்று ஏதேனும் வரைமுறை இருக்கிறதா? இதுதான் இப்படித்தான் என விளையாட்டுகளின் உருவாக்கத்திற்கென ஏதேனும் கட்டமைப்பு இருக்கிறதா? நம்மைப் பொறுத்தவரைக்கும் ஆலமரத்தின் கிளையைப் பிடித்துத் தொங்கி ஊஞ்சலாடுவதும் விளையாட்டுத்தான். அதே ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து கட்டம் கீச்சி கல் சேர்ப்பதும் விளையாட்டுத்தான். ஆக, நம்முடைய மதிப்பீட்டின்படி பொழுதுபோக்குக்காக ஆடப்படும் அத்தனையுமே விளையாட்டுகள்தான். ஆனால், உலக மதிப்பீடு அப்படியாக இல்லை.

குறிப்பாக, விளையாட்டுகளை அங்கீகரித்து அவற்றை நெறிமுறைப்படுத்தும் அமைப்புகள் சகட்டுமேனிக்கு எல்லாவற்றையும் விளையாட்டாக ஏற்றுக்கொள்வதே இல்லை. சதுரங்கம் ஒரு விளையாட்டா? அதில் ஆடுபவர்களை விளையாட்டு வீரர்களாக அங்கீகரிக்கலாமா? என ஏதோ ஒரு விநாடி வினா நிகழ்ச்சியில் உங்களிடம் கேள்வி கேட்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். பெரிதாக எந்த அலட்டலும் இல்லாமல் நீங்கள் 'ஆம்' என பதிலளித்து விடுவதற்கான அத்தனை சாத்தியங்களும் இருக்கின்றன. ஏனெனில், 'செஸ்' என்பது ஒரு விளையாட்டென்று தான் நாம் காலங்காலமாக நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு, செஸ்ஸை ஒரு விளையாட்டாகவே அங்கீகரிக்கவில்லை. அதனால்தான் இன்றளவும் ஒலிம்பிக்கில் செஸ்ஸிற்கு இடமே இல்லை. உடலுழைப்பு சார்ந்தவை மட்டுமே ஒலிம்பிக்கால் விளையாட்டென்று அங்கீகரிக்கப்படுகின்றன. 'செஸ்' புத்திக்கூர்மை சார்ந்த ஆட்டமென்பதால் அதற்கு விளையாட்டுகளின் பட்டியலில் இடம் இல்லையாம்! சரி, அப்படி உடலுழைப்பு சார்ந்து ஒலிம்பிக்





எவற்றையெல்லாம் விளையாட்டு என அங்கீகரித்து வைத்திருக்கிறது என ஒரு பார்வை பார்த்தோமெனில் ஆச்சரியம் உண்டாவதைத் தவிர்க்கவே முடியாது.

நாம் வெறுமென 'கேளிக்கை'யாக நினைத்து வந்த நடனத்திற்கு ஒலிம்பிக் விளையாட்டு என்ற அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறது. உடலுழைப்பு சார்ந்த விடயம் என்பதால் நடனமும் விளையாட்டு என்ற இடத்தை நோக்கி நகர்ந்திருக்கிறது. 2024 ஒலிம்பிக் பாரிஸில் நடைபெறவிருக்கிறது. இந்தத் தொடரில் புதிதாக சில விளையாட்டுகள் அறிமுகமாக இருக்கின்றன. அவற்றில், 'பிரேக் டான்ஸு'ம் ஒன்று. பிரேக் டான்ஸை ஒலிம்பிக்கில் சேர்ப்பதற்கான முயற்சி பல ஆண்டுகளாகவே முன்னெடுக்கப்பட்டது. குளிர்கால ஒலிம்பிக் தொடர்களில் நடத்தப்படுவதைப் போல நடன நிகழ்வுகள் மிக முக்கியமானதாக கருதப்படும் கோடைக்கால ஒலிம்பிக்கிலும் நடத்தப்பட வேண்டும் என விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

அதன் விளைவாக, 2018 இல் அர்ஜெண்டினாவில் நடந்த இளையோருக்கான 'ஒலிம்பிக்' தொடரில் பிரேக் டான்ஸு'ம் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து டோக்கியோ ஒலிம்பிக் நெருங்கிய தருவாயில் 'கோடைக்கால ஒலிம்பிக்' தொடரில் பிரேக் டான்ஸ் போட்டியும் அறிமுகப்படுத்தப்படும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

'நடனம்' என்பது கேளிக்கை சார்ந்த விடயமாகக் கருதப்பட்டாலும் நடனத்தின் எல்லா வகைகளையுமே கேளிக்கை என்கிற குறுகிய வட்டத்திற்குள் அடக்கிவிட முடியாது. இந்த இடத்தில்தான் பிரேக் டான்ஸு'ம் முக்கியத்துவம் பெறுகிறது. பிரேக் டான்ஸ் என்பது அமெரிக்காவில் வாழும் ஆப்ரோ அமெரிக்க இளைஞர்கள் மூலம் தோன்றி பல இடங்களுக்கும் பரவிய ஆட்டமாகும்.

நியூயோர்க் நகர வீதிகளில் செய்வதற்கரிய வகையில் உடலை வளைத்து நெளித்து தலைக் குப்புற உருண்டு புரண்டு ஆடப்படும் இந்த ஆட்டத்தைத் திரைப்படங்களில் கூட பார்த்திருப்போம். இந்த வகை ஆட்டத்தைத் தன்னுடைய நிகழ்ச்சிகளிலும் கலந்து அவற்றை உலகறியச் செய்தவர் காலஞ்சென்ற மைக்கேல் ஜாக்சன். வித்தியாசமான இசைக்கோப்புகளுடன் வெட்டி வெட்டி ஆடும் அந்தத் துடிப்பான ஆட்டம்தான், 2024 முதல் ஒலிம்பிக் எனும் உலக மேடையில் அரங்கேறவிருக்கிறது.

இந்த ஆட்டத்தில் வெற்றியாளர்கள் எப்படித் தீர்மானிக்கப்படுவார்கள் எனும் குழப்பம் எழக் கூடும். நியாயமான குழப்பம்தான். ஓய்வுபெற்ற நடிகையர் குழாமை வைத்துக்கொண்டு இஷ்டத்திற்கு வெற்றியாளர்களைத் தீர்மானித்துக் கொள்ள இது ஒன்றும் டி.வி ரியாலிட்டி ஷோ இல்லையே. உலக அரங்கில் இந்த ஆட்டத்தில் வெற்றியாளரைத் தீர்மானிக்க ஒலிம்பிக் அமைப்பே சில விதிமுறைகளையும் காரணிகளையும் வெளியிட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள் இரு பிரிவினருக்கும் தனித்தனியாகவே இந்தப் போட்டி நடைபெறும். இரு பிரிவிலும் உலகளவில் டாப் 16-ஆக இருக்கும் டான்ஸர்கள் இதில் பங்கேற்பார்கள். இந்த பிரேக் டான்ஸில் **'Top Rock, Freeze,Down Rock, Power Moves, Flair'** என சில குறிப்பிட்ட வகையிலான அசைவுகளை டான்ஸர்கள் செய்து காட்டியாக வேண்டும். டௌன் ராக் என்பது தலைகீழாக நின்று நடன அசைவுகளை நிகழ்த்திக் காட்டக்கூடிய வகை. **Power Moves** என்பது இதிலேயே இன்னொரு வகை. இதில் அப்படியே தலைகீழாக நின்றுகொண்டு ஒட்டுமொத்த உடலையும் அப்படியே பம்பரம் போலச் சுற்ற வேண்டும். அதேமாதிரி, ஃப்ளேர் என்பது கைப்பிடிகள் பொருத்தப்பட்ட பலகையில் நின்று சாகசங்கள் செய்வது.

வெற்றியாளர்களைத் தீர்மானிக்க குறைந்தபட்சமாக 5 பேரை உள்ளடக்கிய நடுவர் குழு இருக்கும். 6 காரணிகளின் அடிப்படையில் போட்டியாளர்களுக்கு இந்தக் குழு புள்ளிகளை வழங்கும். அதன்படி, வீரர், வீராங்கனைகள் நடன அசைவுகளை நிகழ்த்தும்போது அவர்களின "கற்பனைத் திறன், ஆளுமை, தொழில்நுட்பம், தனித்தன்மை, இசைச்சேர்வு, ஒட்டுமொத்தச் செயற்பாடு" என இந்தக் காரணிகளின் அடிப்படையில் ஒவ்வொரு சுற்றின் முடிவிலும் புள்ளிகள் வழங்கப்பட்டு இறுதியில் ஒட்டுமொத்தமாக வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவார்கள்.

நவீன இளைஞர்களின் மனதைக் கொள்ளைகொண்ட இசைக் கலாசாரத்தையும் நடன முறையையும் பிரேக் டான்ஸ் தன்னகத்தே கொண்டிருந்தாலும் ஒரு காலத்தில் இந்த ஆட்டம் ஏழைகளின் திறன் வெளிப்பாடாகவே பார்க்கப்பட்டிருக்கிறது. ஆப்ரோ அமெரிக்கர்கள் எதிர்கொண்ட வறுமையும் புறக்கணிப்புமே இந்த பிரேக் டான்ஸ் ஆட்டத்தின் தோற்றத்திற்கான அடிநாதமாக அமைந்ததாகவும் கூறப்படுகிறது.

அந்த வகையில் பிரேக் டான்ஸ் உலகளவில் பெரும் கௌரவமிக்க ஒரு மேடையில் ஏறவிருப்பது வரவேற்கக்கூடியதே! அப்படியே அந்த செஸ்ஸையும் ஒலிம்பிக்கில் இணைத்தால் தனியாக ஒலிம்பியாட் என ஒன்று நடத்துவதற்கான தேவை இருக்காது.

செஸ் புத்திக்கூர்மைமிக்க ஆட்டம்தான் என்றாலும் அதற்கு உடல் ரீதியான கட்டுப்பாடுகளும் அவசியமே!



2022 ஆம் ஆண்டின் மாபெரும் துயர நிகழ்வாக நடைபெற்று வரும் ரஷ்யா - உக்ரைன் போரில் 2 இலட்சம் இராணுவ வீரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்கிற செய்தி உலக அரசியல் அரங்கில் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

# முடிவுக்கு வருமா ரஷ்யா - உக்ரைன் போர்?

கடந்த 10 மாதங்களாக நடைபெற்றுவரும் ரஷ்யா-உக்ரைன் போர் குறித்து பல்வேறு அதிர்ச்சி தரும் செய்திகள் வெளியாகி வருகின்றன. இந்த நிலையில், ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையத்தின் அறிக்கை ஒன்று கடந்த டிசெம்பர் 27ஆம் திகதி வெளியாகியிருக்கிறது. அதில், உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்திருக்கும் போரால் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் 6,884 பேர் உயிரிழந்ததாகவும் 10,947 பேர் காயமடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'போரில் கொல்லப்பட்ட 6,884 பேரில் 2,719 பேர் ஆண்கள், 1,832 பேர் பெண்கள், 391 பேர் குழந்தைகள், மீதமுள்ள 1,942 பேரின் பாலினம் தெரியவில்லை' என்கிறது அந்த ரிப்போர்ட். உக்ரைனின் டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய இரு பிராந்தியங்களில்தான் அதிகமானோர் போரால் உயிரிழந்திருக்கிறார்கள். அங்கு, 4,052 பேர் கொல்லப்பட்டதாகவும் 5,643 பேர் காயமடைந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. போரின் தீவிரம் அதிகமிருக்கும் பகுதிகளில் உயிரிழப்புகளும் பாதிப்புகளும் இன்னும் அதிகமிருக்கலாம் என்றும் அது பற்றிய முழுமையான விபரங்கள் கிடைக்கவில்லை என்றும் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் போர் தொடங்கியதிலிருந்து இன்றுவரை உக்ரைன் இராணுவ வீரர்கள் 10,000 - 13,000 பேர் உயிரிழந்ததாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் ஆலோசகர் மைகைலோ தெரிவித்திருக்கிறார். ஆனால் 'ரஷ்யா - உக்ரைன் என இரு தரப்பிலும் 2 இலட்சம் இராணுவ வீரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்' என்று அமெரிக்கா சொல்கிறது. அமெரிக்காவின் மூத்த இராணுவ அதிகாரி மார்க் மில்லே, "உக்ரைன் இராணுவ வீரர்கள் ஒரு இலட்சம் பேரும் ரஷ்ய இராணுவ வீரர்கள் ஒரு இலட்சம் பேரும் போரில் உயிரிழந்திருக்கிறார்கள்" என்று தெரிவித்திருக்கிறார்.

அதேநேரத்தில் உக்ரைன், ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் தங்கள் தரப்பில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை குறித்து அதிகாரபூர்வமான புள்ளிவிபரங்களை வெளியிடவில்லை. இந்தச் சூழலில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் தொலைபேசி வாயிலாக உரையாடியிருக்கிறார். அப்போது "உக்ரைனில் நடந்துவரும் மோதலை, பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே முடிவுக்குக் கொண்டுவர முடியும்" என்று புடினிடம் மோடி தெரிவித்திருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் புடினும் மோடியும் கலந்துகொண்ட போதும் போர் நிறுத்தம் குறித்து புடினிடம் மோடி பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு, "இந்த விவகாரத்தில், இந்தியாவின் கவலைகள் குறித்து எனக்குத் தெரியும். போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்" என்று புடின் பதிலளித்திருந்தார்.

தற்போது, "ரஷ்ய ஜனாதிபதி உண்மையிலேயே உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினால், அதற்கான வழியைத் தேடுவதில் அவருக்கு ஆர்வம் இருந்தால் புடினுடன் பேசுவதற்கு நான் தயார்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் டிசெம்பர் 2 ஆம் திகதி அறிவித்திருக்கிறார்.


ரஷ்யாவும் இதற்கு மேல் உக்ரைனுடனான போரை நீட்டிக்க விரும்பவில்லை எனத் தெரிகிறது. அதனால்தான், "போரை முடிவுக்குக் கொண்டு வருவது தான் எங்கள் இலக்கு" என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறியிருக்கிறார். கடந்த டிசெம்பர் 23 ஆம் திகதி செய்தியாளர்களிடம் பேசிய புடின், "ரஷ்யாவின் கவலைகளை அமெரிக்கா புறந்தள்ளுகிறது. ரஷ்யாவை பலவீனப்படுத்துவதற்காக உக்ரைனைப் போர்க்களமாகப் பயன்படுத்துகிறது" என்றும் அமெரிக்காமீது குற்றம்சாட்டியிருக்கிறார்.

'நம் தாய்மண்ணை யார் விற்றார்கள்
எனக்குத் தெரியாது ஆனால், அதற்கான விலையை
யார் கொடுத்தார்கள் என்பதைப் பார்த்தேன்...'

எனும் பாலஸ்தீனக் கவிஞர் மகமூத் தர்வீஷின் கவிதை வரிகள்தான் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனே!



வளர்ந்து வரும் உலகில் நீ
சரித்திரங்கள் படைக்க வேண்டும்
வானளாவ உன் புகழ்
வளர நீ வாழ வேண்டும்
இவனல்லவோ மனிதன் என
உன்னை ஊருலகம் புகழ வேண்டும்
தவமிருந்து பெற்றவர்கள் இதைக்
கேட்டு மனம் குளிர வேண்டும்
போதையெனும் அரக்கனுக்கு-உன்
வாழ்வில் இடம் கொடுத்திடாதே
உன்னைப் பெற்றவர் நெஞ்சினிலே
நெருப்பை அள்ளிக் கொட்டிடாதே
நல்லவற்றை கூட்டிக் கொண்டு
கெட்டவற்றை கழித்துக் கொண்டு - மனிதனாய்
நீ வாழ திடசங்கற்பம் பூண்டு கொள்
இன்றைய இளைஞனே வருங்கால உலகை
தூணாக நீ தாங்க
துணிவு கொண்டு எழுந்திடுவாய்...

இ. இளமதி,யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## வாழ்க்கைப் பயணம்

புதிரோடு வாழ்கின்றோம் புரியாமல்
எதிர்கொண்டு வாழ்வதற்கு துணியாமல்
வாழ்கின்றோம் வாழ்க்கை தந்த
வலியோடு
வருங்காலம் என்னவாகுமென உணராமல்
இறப்பு நிகழுமென தெரிந்தென்ன
இடுகாடு எமக்கில்லை ஊரோடு
தொலைதூரம் சுமக்கின்றோம்
எதிர்கால வலியோடு
வாழ்க்கையில் எமக்கு மட்டுமேன் கடிவாளம்
வலியோடு வாழ வைக்கும் அதிகாரம்
தடைதாண்ட வழி தெரிந்தும் தடுமாற்றம்
தன்னார்வம் இல்லாத சனத்தோடு விழிக்கின்றோம்
மலை போல நினைவோடு வாழ்கின்றோம்
மாயையெனும் முகமூடி துணையோடு
வாழ்க்கை சொல்லித் தரும் தத்துவங்கள் எத்தனையோ
வாழ்ந்துவிட்டு போவதில் தான்
எங்கள் கற்பனையே



இ. துரையரசன்
வித்தியாபுரம்
ஒட்டுசுட்டான்.

## மயக்கம் உனக்கு வருமா சொல்?

மனிதா மனிதா 'மமதை விடு
இனிதே வாழும் உயிர்களைப் பார்
பறவை இனத்தில் போரில்லை
சிறகை விரித்துத் தரணி யெல்லாம்
சுற்றித்திரிவது புரிகிறதா?

விலங்குகள் எவையும் மண்ணிற்காய்
நிலத்தில் கலகம் புரிவதில்லை
துலங்கும் அறிவைப் பெற்றிருந்தும் நீ
கலகம் புரிந்து ஏன் சாகின்றாய்?
தரணி உனக்குப் புதைகுழியா?

உலகம் மனிதர் சொந்தமெனில்
கலகம் புரிவது விலங்குகளா?
நிலத்தில் பேதம் பிரிவெல்லாம்
நீசத் தனத்தின் விளைவன்றோ?
கலகம் புரிந்து கெடுப்பதனால் இத்
தரணி தாயகம் ஆகிடுமா?

வளவைவளவன்

## மௌனத்தின் தேடல்- 591



## பாசக்களிப்பு

அரவணைத்திடும் அன்பிற்குமோ
அளவு ஏதும் இல்லாமலே
தோளில் சுமை தெரியாமலே
பேர்த்தியின் ஆனந்தத்தில்
பாட்டியின் பாசக்களிப்பு

தங்கத்தமிழன்.
காரைநகர்.

## விண்ணை எட்டிய...

கண்ணை மூடிக்
காணும் பரிசம்
விண்ணை எட்டிய
வெகுமதி போலும் பேரக்
குழந்தையின்
பிடிப்பின் வலிமை
அன்புக்கான ஆழம்
ஆராதனைக்குரியதாமே!

வைகுதன்.
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 592



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பெருமிதமாமோ

பேரரின் படிப்புப் பட்டறை
பாசப் பிணைப்பின் பரிசம்
பள்ளி கொள்ளும் பரவசம்
பல்கலையின் பாங்கென
பேர்த்தியின் கட்டியணைப்பு
பேறாய் வாய்த்த பெருமிதமாமோ!

கார்வண்ணன், காவலூர்.

## ஆச்சி

தாலாட்டுப் பாடும் தாயே நீ ஆச்சி
தரணியிலே உன் பதவியே ஆட்சி
அம்மா அப்பா வேலைக்கு சென்றாலும்
அன்பாக் பாலூட்டி சீராட்டும் பாசக்காரி
ஓய்வு உறக்கம் இல்லா வேலைக்காரி.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## தீர்ப்பு வழங்கும்

பெற்றோரின் அன்பா?
பேர்த்தியின் பாசமா?
பட்டிமன்றம் வேண்டாம்
இப்படமே தீர்ப்பு வழங்கும்

பி.மதுஷ்சன். தையிட்டி.

## பாச உறவு வாழ

முற்றிப் பழுத்த பழமொன்றை
பிஞ்சொன்று வாஞ்சையுடன்
கட்டியணைத்து குதூகலிக்கும்
பரவசம் மிகும் ஆனந்தக் காட்சி
இப்படியொரு பாச உறவு வாழ
எத்தனை பெற்றோர் தம்
குருத்துக்களுக்கு கற்பிக்கின்றனர்.

சி.இ.அன்புதுரை. சம்மட்டியோலை.
மானிப்பாய்.

## மருந்து - விருந்து

கள்ளமில்லா உள்ளங்கள் கனிந்து
மலர்ந்த இந்த மகிழ்ச்சி மலர்கள்
இளமைக்கு ஊட்டச்சத்து விருந்து
முதுமைக்கு சவா சஞ்சீவி மருந்து

பி.யதுர்சன்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## எதிர்பாராத விபரீதம்

காலத்தின் பதிவு 49

புத்தி மாறாட்டங்கூட ஏற்பட்டுவிடும் போலிருந்தது வில்வலனுக்கு. எதிரி வாளுடன் பாய இருக்கும் ஆபத்தான சமயத்தில் மிகவும் நிதானமாக, சீடனுக்கு வாள் பயிற்சி அளிக்கும் குருவைப் போல் பலமான முற்னேற்பாடுகளைச் செய்ய இளையபல்லவன் முயன்றது அவனுக்குப் பெரும் குழப்பத்தை விளைவித்தது.

வாளை எடுத்ததுமே எதிரி வாள் மீது மோதி பழக்கப்பட்ட வில்வனுக்கு அதுவும் ஒரு குழப்பத்தைத் தொடங்கியதுமே பல கொலைகள் திடீரென ஏற்படும் காட்சியை மட்டுமே வருடாவருடம் கண்டிருக்கும் அந்தப் பூர்வக்குடித் தலைவனுக்கு இந்த நிதானமும் ஏற்பாடும் புதிதாயிருந்ததால், நிதானமிழந்த நிலையிலும் அவன் பெரும் ஆச்சரியத்துக்கு உள்ளானான்.

அப்படி அவன் ஆச்சரியத்தின் வசப்பட்டு நின்ற சமயத்தில் போரிடத் தயாரான அந்த இருவருக்கும் இடையில், பலவர்மன் தன் காவலர் இருவருடன் புகுந்தான். பெரும் வேல்களை ஏந்தி நின்ற காவலர் கோட்டைத் தலைவன் கண்ணசைத்தால் வில்வலன் மீது வேலெறிவதற்குத் தயாராயிருந்தார்கள்.

தன்னை நோக்கிய அந்த ஈட்டி முனைகளையும் கல்லென உணர்ச்சி ஏதுமற்ற முகத்தை வைத்துக் கொண்டு எதிரே நின்ற பலவர்மனையும் கண்ட வில்வலன் சித்தத்தில் வியப்பு மறைந்து மீண்டும் கோபம் தலைதூக்கியது.

"பலவர்மா! இதில் நீ தலையிடாதே; அகன்றுவிடு. இல்லையேல்.." என்ற வில்வலன் மீதிப் பேச்சை முடிக்காமல் விட்டாலும் அவற்றின் முடிவு எதுவாயிருக்கும் என்பதை உணர்ந்து கொண்ட பலவர்மன் உணர்ச்சி ஏதுமற்ற வறண்ட குரலில் சொன்னான். "வில்லவா! இத்தனை வருடங்களாக உன் செய்கை எதையும் நான் ஆட்சேபித்ததில்லை. நீ செய்த கொலைகளில் கூட நான் தலையிடவில்லை. அவற்றைப்பற்றி விசாரித்ததும் இல்லை. ஆனால் இந்தச் சண்டையில் தலையிட வேண்டி அவசியம் இருக்கிறது." என்றான்.

"என்ன அவசியம்!" என்று சீறினான் வில்வலன்.

"இந்தக் கோட்டையின் நலன், உன் இனத்தாரின் நலன், இந்தக் கடற்கரைவாசிகளின் நலன், எல்லாம் இந்தச் சண்டையைத் தடைசெய்ய வேண்டி அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது," என்றான் பலவர்மன்.

இப்படிப் பலவர்மன் பேசிக்கொண்டிருக்கையில் வில்வலனின் சகாக்கள் மூவரும் உருவிய வாளுடன் வில்வலனுக்குப் பின்னால் நெருங்கி வந்துவிட்டார்கள். அவர்கள் அழைத்து வந்த ஐம்பது வீரர்களும் அவர்களைக் காத்து அடை போல் பின்னால் அணிவகுத்துத் தொடர்ந்தார்கள்.

அதைக் கண்ட கொள்ளைக் கூட்டத்தின் ஒரு பகுதி அந்த ஐம்பது பூர்வக்குடி மக்களையும் நோக்கி நகர்ந்தது. பலவர்மன் கண்கள் நாற்புறமும் சுழன்றன. அவற்றின் ஜாடை கண்ட கோட்டைக்காவலர் இருபது முப்பது பேர் திடீரென வந்து கொள்ளையருக்கும் பூர்வக் குடிகளுக்கும் இடையே தடையாக நின்றார்கள்.

"தடுக்காதே, விடு வழியை" என்று கொள்ளைக்காரன் ஒருவன் கத்தினான்.

மற்றும் பலர், "தடுக்காதே, தடுக்காதே!" என்று கூவினார்கள்.பலவர்மனின் அதிகார விழிகள் மிகுந்த வஞ்சகத்துடனும் பயங்கரத்துடனும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தை நோக்கின. "இந்தப் பூர்வக்குடியில் ஒருவர் தொடப்பட்டாலும் உங்களில் பத்துப் பேர் வெட்டுப் பாறைக்கு வர வேண்டியதிருக்கும்" என்று கடுமையுடன் சொற்களை அவன் உதடுகளும் உதிர்த்தன. அவன் கொடுமையின் எல்லையை உணர்ந்ததாலோ என்னவோ முன்னேறிய கொள்ளையர் சற்றுத் தேங்கி நின்றனர்.

இந்தச் சமயத்தில் வில்வலன் பயங்கரமாக நகைத்தான். "அவர்களைத் தடுக்க வேண்டாம் பலவர்மா! அவர்கள் வரட்டும். என் வீரர்கள் பதில் சொல்வார்கள்" என்று அந்தப் பயங்கர நகைப்புக்கிடையே பேசிய அந்தப் பதக் இனத் தலைவன் " என்னையும் தடுக்காதே வழியை விட்டு விலகி நில்" என்று இரைந்தான். (தொடரும்...)

# "தூவானம்" ஈழத்துத் திரைத் துறையில் ஒரு சுவடு

திரைப்படம் சமூகத்தின் எந்த மூலைக்கும் சென்றுசேரக்கூடிய ஒரு பொழுது போக்குக்கலை. திரைப்படத்தின் பேசு பொருள்கள் இது காலவரையும் பல்வேறு பட்டனவாய் இருந்து வந்திருக்கின்றன. சமூக சீர்திருத்த கருத்துக்கள், நகைச் சுவை, வரலாறு எனப் பல்வேறுபட்ட கூறுகளின் சேர்க்கையில் திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஈழத்து திரைப்பட வரலாற்றினை எடுத்துக் கொண்டால் ஆங்காங்கு தெட்டம் தெட்டமாக சில முயற்சிகள் தொடரப்படுவதுண்டு அவ் வகையில் நித்திலம் கலைக் கூடத்தினுடாக மருத்துவர் சிவன்சுதன் எனும் சமூக ஆர்வலர், நாடகக் கலைஞர் க.ரதிதரனுடன் இணைந்து வெளியிட்டுள்ள திரைப் படம் தூவானம்.

நம்மவர் படைப்புக்களை ரசனைக் குட்படுத்தும் போதுநாம் சிலவற்றை நன்கு உள்வாங்கிக் கொள்ள வேண்டும் அவை நம்மவருக்கு நெருக்கமான மொழியில் நம்மவர் பண்பாட்டு வடிவங்களை கொண்டதாகவே அமையும். தமிழகத்திலிருந்து வெளி வருகின்ற ஏராளம் பொழுது போக்கு திரைப்படங்களைப் போல ஒன்றைத்தான் நாமும் செய்யப் பேகின்றோம் எனின் அதற்கு நாம் எதற்கு? அங்கிருக்கின்ற அவ்வளவு பேர் போதுமே அவ்வகையான திரைப்படங்களை எடுப்பதற்கு?

இது எம்மவர் சித்திரம், எம்மவர் உணர்வுகளை, எம்மவர் மொழி வழக்கை எங்களது ஊர்களை சுட்டுவதாகத்தானே இருக்கும் மருத்துவர் சிவன்சுதன் சமுதாய மேம்பாட்டை முன்னிறுத்தும் ஒரு மருத்துவர். தன்னுடைய சமூகப்பணி மூலம் சமுதாயத்தை புடம்போட நினைப்பவர். இயற்கை நேசர், மரக்கன்றுகளை வளர்ப்பதை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றாடலிலும், மனங்களிலும் பசுமையை விளைவிப்பவர். அத்தகைய ஒருவரின் எண்ணத்தில் உதித்த திரைப்படைப்பின் பசுமை இயல்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

அளவு மீறாத பாத்திரங்களோடு கதை நகர்கிறது. சிறு வயதில் ஊரை விட்டு வெளியேறிப் புலம்பெயர்ந்த ஒரு இளைஞன் தன் பிள்ளைகளோடு ஊரு க்குவருவதில் ஆரம்பிக்கிறது திரைப்படம். முறிகண்டிப்பிள்ளையார் கோவில் வழிபாடு மூலம் தெற்கிலிருந்தான வடக்கு நோக்கிய பயணத்தில் கிடைக்கின்ற ஆன்மீக ரீதியான ஆறுதல் சுட்டிக் காட்டப்படுகின்றது.

திரைக்காட்சிகளில் பயணங்கள் காட்சிப்படுத்தபடும் போது, இயற்கை அழகு வஞ்சனையின்றி விரிவதுண்டு இத் திரைப் படத்திலும் எமது மண்ணின் தோற்றப் பாடுகளில் கமெரா நகர்கிற போது இந்த அழகெல்லாம் எங்கள் முன் தானே கொட்டிக் கிடக்கிறது. எனும் மெல்லியதொரு ஆச்சரியம் மனதினுள் படர்கிறது.



இத்திரைப் படத்தினுடாக மறக்கப்படக் கூடாத எங்களின் பண்பாட்டு விழுமியங்கள் மீள ஞாபகப்படுத்தப்படுகின்றன. மரபு சார்ந்து வாழ்ந்த நாம் உலகமயமாக்கலின் விளைவாகவும், குறித்த ஒரு சந்ததியின் புலம்பெயர் வாழ்வினாலும் மேனாட்டு நாகரிகத்தால் நம்மையறியாமலே சூழப்பட்டிருக்கின்றோம். அதுவொரு நச்சு வளையம் என்பதை நாம் அறியாமலேயே இருக்கின்றோம். அது சுட்டிக்காட்டபடும் போதுதான் எங்களிடமிருந்த எங்களுக்கேயுரிய தனித்துவங்களை நாங்கள் உணர்ந்து கொள்ளமுடிகிறது. அது இக் கதையில் புலம்பெயர்ந்து ஊர் திரும்பும் கதாநாயகன் மூலம் பார்வையாளர்கள் மனதில் அழுத்தமாக பதியுமாறு சொல்லப்பட்டிருகிறது.

புலம்பெயர்தல் ஏற்படுத்திய தாக்கங்களில் இன்னுமொன்று புலம்பெயர்ந் தோரால் ஈட்டப்படும் செல்வம் அவர்கள் உறவினர்களால் அதிசயமாய் நோக்கப்பட்டு இங்குள்ளோரையும் புலம்பெயர் வாழ்வு நோக்கி ஈர்த்தலாகும். அவ்வாறான ஒரு குடும்பத்தின் இயல்பான எதிர்பார்ப்புக்கள் யாதார்த்த பூர்வமாகத் திரையில் பதிவாகின்றன. கடந்தகாலப் போர்ச் சூழலின் அவலங்கள் எந்த வொரு கலைப் படைப்பிலும் தவிர்க்க முடியாதவை ஆனால் அவைமட்டுமே ஒரு படைப்பைத் தீர்மானிக்கும் என்பதும் இல்லை அவ் வகையில் சிறு, சிறு துளிகளாகப் போரின் பாதிப்புக்கள், அவலங்கள் மனதில் ஒட்டுமாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இலட்சிய வேகத்தோடு நகரும் கதையில் இடையிடையே சமூகத்தின் தற்கால அச்சுறுத்தல்களும் அடையாளப்படுத்தப்படுகின்றன. குடும்பத் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மை பிள்ளைகளை விரும்பிய துறையில் ஈடுபடுத்தாது தத்தம் கனவுகளுக் கேற்ப அவர்களை வனைய முனையும்பெற்றோர், சமூகத்தின் இழிவார்த்தைகளால் புண்படுத்தப்பட்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகக் கூடிய நிலையிலான இளைஞர்கள் என சமூகத்தின் சிறிய அசைவுகளும் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை இத் திரைப் படம் தொட்டுக்காட்ட முயற்சி செய்கிறது. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒரு எதிர்பார்ப்போடு நகரும் கதையின் உச்சகட்டம் நமது விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டிய புள்ளியில் அனைத்துக் கரங்களையும் ஒன்றிணைக்கக் கோருகிறது முப்பதாண்டுகளாக நாம் இழந்த வற்றில் மீட்க வேண்டிய தன்னம்பிக்கை, ஒற்றுமை, சுய பொருளாதாரம், சமூக விழுமியங்கள் என்பவற்றை ஒரு சுடராக மீட்டெடுப்பதில் இக் கதையின் தேடல் முற்றுப் பெறுகின்றது.

இத்திரைப்படைப்பின் கதை, திரைக் கதை, வசனம், பாடல் வரி முழுவதையும் மருத்துவர் சிவன்சுதனே மேற்கொண்டிருக்கிறார். அவரது கனவு இது. நேரடி நோயாளர்களுக்கு மாத்திரமன்றி சமூகத்தின் மறைமுகமான நோய்களுக்கும், நோயாளர்களுக்கும் சிகிச்சை தர வேண்டுமென்று அவர் ஒரு மருத்துவக் கலைஞராக சிந்தித்ததன் விளைவே இப்படைப்பு. இக் கதையின் சிறுபாத்திர மொன்றாகவும் அவர் நடித்துள்ளார். நாடக நெறியாளரான க.ரதிதரன் இக்கதையின் பிரதான பாத்திரம் ஒன்றாகத் தன் நடிப்பைப் பாந்தமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இத்திரைப்படம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக திரைப்பட விழாவிலே திரையிடப்பட தெரிவாகியது ஒரு பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். மொத்தத்தில் ஈழத்துத் திரைத்துறையில் அழுத்தமான காலடியைப் பதிக்கவுள்ளத் இத் திரைப்படம் தமிழ்ச் சமுகத்திலுள்ள அனைவராலும் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தாட்சாயினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

324

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உயிரின் முடிவில்...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அடுத்த வீட்டுச்செல்லையா என் மகனைத் தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக் கிறார். மகனும் பாவம்தான். இராத்திரியில் இருந்து சாப்பாடு தண்ணி இல்லாமல் இப்பொ ழுதும் அழுதுகொண்டே இருக்கி றான். நான் பேசியதை நினைத் துத்தான் அழுகிறானா?

இல்லை இருக்காது. அவ னுக்கு என்னை நன்றாகத் தெரி யும். கோபம் வரும்போது நான் எல்லை மீறிப் பேசுபவன் என்பது அவனுக்குத் தெரியும். நான் இறந்து போனதை நினைத்துத் தான் அவன் அழுது கொண்டி ருக்கிறான்.

மகனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் செல்லையாவும் பாவம்தான். அவருக்கு 5 பிள் ளைகள். இரண்டு வெளிநாட்டில், இரண்டு கொழும்பில். இங்கு இருக்கும் மகனுடனும் ஏதோ பிரச்சினை. தனியத்தான் இருக் கிறார்.

என்னுடைய மகன் என்றால் என்னை இப்படித் தவிக்க விட் டிருப்பானா? எனக்குக் காய்ச்சல் வந்தால் அவனுக்கு நித்திரை வராது. இப்படிப்பட்ட மகனைத் தான் நான் "எனக்குக் கொள்ளி யும் வைக்கப்படாது" என்று பேசி னேன். ஏன்? நான் அப்படிச் சொல்லாமல் விட்டிருக்கலாம்.

மகனுடன் இறுதியாகச் சில வார்த்தைகள் பேச வேண்டும் என்ற ஒரு துடிப்பு என்னுள் இருந்து கொண்டிருக்கிறது. நான் பேசத் துடிக்கும் இந்த வார்த் தைகள் அவனின் இதயத்திற்கு கேட்கும் என்று நம்பி பேசிப் பார்க்கிறேன்.

"தம்பி! உன்னிலே எனக்குக் கோபம் இல்லை. சொல்லிலே சொல்ல முடியாத அன்பு மட்டும் தான் இருக்கிறது. நீ என்னுடை யவன் என்ற உரிமையில் நான் எல்லை மீறிப் பேசியவை உண் மையில்லை. நீ ஓயாமல் உழைத் துக் கொண்டேதான் இருக்கிறாய். எனக்காக, உன் குடும்பத்திற்காக, ஏன் இந்த ஊருக்காகவும் உழைத் துக் கொண்டுதான் இருக்கிறாய். இப்படி உன்னால் முடியுமாக இருக் கும் காலத்திலேயே உன்னைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப்பார். பிற்காலத்தில் உன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள். இது காலத் தின் ஒரு கட்டாயத்தேவை. பெரிய வர்கள், மூத்தவர்கள் என்று ஏட்டிலும் எழுத்திலும்தான் முக்கி யத்துவம் இருக்கிறது. நடைமு றையில் அந்தக் கௌரவம் கிடைப் பதேயில்லை.



இவ்வளவு காலமாக எங்க ளுக்காகவே உழைத்துத் தேய்ந்து போன ஒரு உயிர் என்ற உணர்வு இருப்பதேயில்லை. குழந்தை களைப் போலவே முதியவர்களும் இலகுவில் நோய்வாய்ப்படும் தன்மை உடையவர்கள். ஆனால் குழந்தைகளுக்குக் கிடைப்பது போன்ற கவனிப்பும் பாதுகாப்பும் மருத்துவ வசதிகளும முதியவர் களுக்குக் கிடைக்கிறதா? ஏன்? இவர்களைத் தேவையற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? உழை ப்பை உறிஞ்சி எடுத்தபின் பிழிந்து எறியும் சக்கைகள் என்று நினைக் கிறார்களா?

உனக்குத் தெரியும் எழுபத்து நான்காம் ஆண்டு உணவுக்குப் பெரிய பஞ்சம் வந்தது. அதில் இறந்து போனவர்களில் பெரும் பங்கினர் முதியவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? இது எதைக் காட்டுகின்றது?

உன்னுடைய அந்திக்காலத்தில் உனக்காகக் குரல் கொடுக்க, பாதுகாக்க யாருமே இல்லாமல் போகலாம். நீ தான் உனக்குப் பாதுகாப்பு. உன்னைப் பற்றியும் கொஞ்சம் இப்பொழுதே சிந்தி. நான் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு போவது உன்னை மறைமுகமா கக் குற்றம் சுமத்துவதற்காக என்று நினைக்காதே. நீ உண்மையில் அப்படிப்பட்டவனும் அல்ல. உன் அந்திக்காலத்திலும் எனக்கு அக் கறை இருக்கிறது என்பதுதான் உண்மை.

சந்ததிக்குச் சந்ததி மனிதன் மாறிக்கொண்டிருக்கிறான். இன்று நீ 'பிழை' என்று நம்பிக் கொண் டிருக்கும் ஒன்றை உன் அடுத்த சந்ததி 'புனிதம்' என்று சொல்ல லாம். இந்தக் கொள்கை வேறு பாட்டை 'சந்ததி இடைவெளி' என்று சொல்லுவார்கள் உனக் குத் தெரிந்திருக்கும். இந்த இடை வெளியை சகித்துக்கொள்வது உன் கடைசிக்காலத்தில் கஷ்ட மாக இருக்கும். அதுதான் பல பிரச்சினைகளுக்கு அடிநாதமா யும் இருக்கும். எனவே நீ இதை சகித்துக்கொள்ள இப்பொழுதிலி ருந்தே உன்னைத் தயாராக்கிக் கொள். ஏனெனில் நீ தனிமனித னாக நின்று அடுத்த சந்ததியைத் திருத்தமுடியாது."

நான் மீண்டும் மகனைப் பார்க்கிறேன். இப்பொழுதும் அழுதுகொண்டே இருக்கிறான். நான் பேசியவை அவனது மன திற்குக் கேட்டிருக்குமா? அன்று நான் பேசியவை என் நெஞ்சி லிருந்து வரவில்லை என்பதை விளங்கிக்கொண்டிருப்பானா? என்னுடைய மகன். நான் வளர் த்த மகன். அவனுக்கு உலகம் தெரியும். இயற்கையின் நியதிக ளும் புரியும். "எனக்கு நீ கொள்ளி வைக்கப்படாது" என்று நான் சொன்ன பின்பும் கொள்ளி வைக்க ஆயத்தமாகி நிற்கி றானே. அதிலிருந்து தெரியவில் லையா? அவனுக்கு எல்லாம் தெரியும் என்று.

"தம்பி! எனது ஆவி இங்கி ருந்து போகவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு முன் சில விஷயங்கள் கேட்பேன். செய்வாயா? முற்றத் தில் நிற்கும் மாமரத்தைத் தறிச் சுப்போடாதை. அந்த சிவத்த ஆட்டுக்குட்டியை இறைச்சிக்கார னுக்கு விற்றுப்போடாதை. எனது பூட்டப்பிள்ளைக்குக் கர்ணனின் கதை சொல்லிப் பாதியில் இருக் கிறது. அதை முடித்துவை. செய் வாயா?"

(முற்றும்)

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2023-31.12.2023



மே மாதத்திற்கு மேல் மிகச் சிறந்த பலன் உண்டு. துலாம் இராசி வாசகர்களே!

புத்தாண்டு பிறக்கப் போகிறது. இதுவரை அர்த்தாஷ்டமச் சனியின் பிடியில் சிக்கியிருந்த உங்களுக்கு இப்பொழுது நல்ல பலன்கள் கிடைக்கப் போகிறது. கடந்த இரண்டரை வருட காலமாக உடலாலும், உள்ளத்தாலும் வேதனைப்பட்டு வந்த உங்களுக்கு, இனி வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்கும் வாய்ப்பு வரப்போகிறது. சனிப்பெயர்ச்சி மட்டுமல்லாமல் குருப் பெயர்ச்சியும், ராகு-கேது பெயர்ச்சியும் நல்ல பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. எனவே எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

வந்து சேரும். பணிபுரிபவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வுடன் அமையும்.

**கும்ப - சனி சஞ்சாரம்**

29.3.2023 அன்று சனி பகவான், அவிட்டம் 3 ஆம் பாதத்தில் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். 24.8.2023 அன்று மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் அவர், 20.12.2023 அன்று மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கிறார். இடையில் கும்ப இராசியிலும் மகர இராசியிலும் வக்கிர இயக்கத்தில் சஞ்சரித்து, நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுப்பார்.

அர்த்தாஷ்டமச் சனி விலகியதால் இனி அடுத்தடுத்து நல்ல காரியங்கள் நடைபெறும். பூர்வபுண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி, அந்த ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப் போவதால் பூர்வபுண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்துப் பாக்கியங்களையும் கொடுப்பார்.

பூர்வீகச் சொத்துப் பிரச்சினை அகலும். பொருளாதார நிலை உயரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். சனி விலகும் நேரத்தில் அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று சிறப்பு வழிபாடுகளை செய்தால், வரப்போகும் நாட்கள் எல்லாம் வசந்தமாக மாறும்.

வதில் உங்கள் திறமை பளிச்சிடும். 11 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் லாப ஸ்தானம் வலுவடையும்.

எனவே பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். கூட்டு முயற்சியிலிருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். தொழில் செய்பவர்கள், கிளைத் தொழில் தொடங்கும் சூழ்நிலை




உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளிடம் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சி**

8.10.2023 அன்று ரேவதி நட்சத்திரம் 4 ஆம் பாதம் மீன இராசியில் ராகுவும், சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதுவரை

இக்காலத்தில் மிகுந்த கவனம் தேவை. பணப்பற்றாக் குறை அதிகரிக்கும். எடுத்த முயற்சிகளில் எண்ணற்ற தடை உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மனக் குழப்பம் அதிகரிக்கும். இக்காலத்தில் வழிபாடுகள் மூலம் தடைகளை அகற்றிக் கொள்ள இயலும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து லட்சுமியை வழிபட்டு வாருங்கள். யோகபலம் பெற்ற தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வந்தால் வளர்ச்சி அதிகரிக்கும்.

**சனி மற்றும் குருவின் வக்கிர காலம்**

27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும் 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகர இராசியிலும் சனி பகவான் வக்கிரம் பெறுகிறார். சனியின் வக்கிர காலத்தில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வீண் பழிகள் ஏற்படும்.

## வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க வாய்ப்பு வரப்போகிறது!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆரோக்கியத் தொல்லைகள் அகன்று அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**புத்தாண்டு கிரக நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். சகாய ஸ்தானத்தில் லாபாதிபதி சூரியனும், விரயாதிபதி புதனும் இருக்கிறார்கள். இதனால் "புத ஆதித்ய யோகம்" ஏற்படுகிறது. 4 இல் உள்ள சனியோடு இராசிநாதன் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். 6 ஆம் இடத்தில் குருபலம் பெற்று விளங்குகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் வக்கிரம் பெற்றிருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் புத்தாண்டு பிறக்கிறது.

ஆண்டு தொடக்கத்தில் குருவின் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால், குடும்ப ஸ்தானம் பலம் பெறுகிறது. எனவே பணவரவு, குடும்ப முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, உத்தியோக முயற்சியில் வெற்றி போன்றவை ஏற்படும். ஒரு சிலருக்கு வீடு வாங்குவது அல்லது வீடு கட்டும் யோகம் ஏற்படலாம். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துங்கள். மருத்துவச் செலவு மனக்கவலையைத் தரலாம். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள்

**மேஷ-குரு சஞ்சாரம்**

22.4.2023 அன்று குருபகவான், அசுவதி நட்சத்திரம் முதல் பாதத்தில் மேஷ இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே நல்ல பலன்கள் வரப்போகிறது. சனி விலகிவிட்டது, குரு பார்க்கப் போகிறது. ராகு-கேதுக்களும் பெயர்ச்சியாகப் போகின்றன.

எனவே இனி படிப்படியாக முன்னேற்றம் வரப் போகிறது. ஜென்மத்தை குரு பார்ப்பதால், அடிப்படை வசதி பெருகும். மதிப்பும், மரியாதையும் உயரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். உடல் நலமும் அதற்கேற்ப ஒத்துழைக்கும்.

குருவின் பார்வை 3 ஆம் இடத் தில் பதிவதால் உடன் பிறப்புகளின் உதவி கிடைத்து உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் உங்கள் சிக்கல்கள் அகல வழிகாட்டுவர். சிரமங்கள் குறையும். தற்போதைய ஊதியத்தைவிட அதிக ஊதியத்துடன் வெளிநாட்டு வேலைக்கான அழைப்பு வரலாம். துணிவும் தன்னம்பிக்கையும் உயரும். செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்து

உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த கேது, 12 ஆம் இடத்திற்குச் செல்கிறார். 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, 6 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இதன் விளைவாக தொழில் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படும். குறிப்பாக சுமார் ஒன்றரை ஆண்டு காலம் உங்களுக்கு நன்மைகளை வாரி வழங்குவார். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

உயரதிகாரிகளிடம் கேட்ட சலுகைகள் கிடைக்கும். 12 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சியில் ஆதாயம் உண்டு. சுப விரயங்களைச் செய்ய முன்வருவீர்கள். வெளிநாட்டிலிருந்து சொந்த ஊர் திரும்ப முடியாதவர்களும் வெளிநாடு செல்ல முடியாமல் தவித்தவர்களும் இப்போது அதற்கான வாய்ப்பைப் பெறுவர். ஆரோக்கிய குறைபாடு ஒவ்வொன்றாக அகலும். கடன் சுமை படிப்படியாகக் குறையும்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

இந்தப் புத்தாண்டில் 4 முறை செவ்வாய் - சனி பார்வை ஏற்படுகிறது.

உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். மனப் பயம் அதிகரிக்கும். எதையும் துணிந்து செய்ய இயலாது. 12.9.2023 முதல் 19.12.2023 வரை மேஷ இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகைக் கிரகம் என்பதால் இந்த வக்கிர காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அர்த்தாஷ்டமச் சனி விலகிய பிறகு அனைத்து நன்மைகளும் படிப்படியாக வந்துசேரும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும்.

பிள்ளைகளுக்கு எதிர்பார்த்த உத்தியோகம் கிடைத்து உதிரிவருமானங்கள் கிடைக்கும். ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், சர்ப்ப தோஷப் பரிகாரங்களை செய்து கொள்வதன் மூலம் தடைகள் அகலும். தானாகவே சில வாய்ப்புகள் வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும், சம்பள உயர்வும் உறுதியாகி மகிழ்ச்சி தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் போதைப்பாவனை பொதுமக்கள் அசௌகரியம்

(தருமபுரம்)

**தற்பொழுது நாட்டில் போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகரித்து உள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.**

போக்குவரத்தை பயன்படுத்தும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், தனியார் உத்தியோகத்தர்கள் எனப் பல ரும் பாதிக்கப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் சிலர் பேருந்து நிலையத்தையும் மற்றும் பேருந்து தரிப்பிடத்தையும் தான் போதைப்பொருள் பாவனை இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர் . இதன் காரணமாக அப்பகுதியில் பேருந்துக்காகக் காத்திருப்பவர்கள் அப்பகுதிகளில் காத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்கள் எனப் பலரும் பல அசௌகரியங்களுக்கு தாம் உள்ளாவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் வினவிய போது பொது இடங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படக் கூடிய வகையில் எவரேனும் இனங்காணப்படுவார்களாயின் அச்சந்தர்ப்பத்தில் பாரபட்சம் பார்க்காமல் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள்.

அத்துடன் தேவையானவர்கள் 071 825 7452 எனும் தொலைபேசி ஊடாக தெரியப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-316)



அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த 2 மாதங்களில் வடமாகாணத்தில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது அதிக தொகையாக மன்னாரில் சனிதா ரிக்கெற்றின் மூலம் வெற்றி பெற்ற வெற்றியாளருக்கு 3 கோடி 26 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்- சிவசாந்தன்)

கிளிநொச்சியில்

# உள்ளூர் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் சேவை சந்தை உட்பட்ட அனைத்து வர்த்தக சந்தைகளிலும் காய்கறிகளின் விலை 500 ரூபாயை தாண்டியது. உள்ளூர் மரக்கறிகளின் விலைகளே அதிகரித்துக் காணப்படுகிறது. எனினும் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, லீக்ஸ், கரட், போன்ஜி ஆகிய மரக்கறிகளின் விலைகள் சாதாரண விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. கத்தரி, பயற்றை, பூசணி, மரவள்ளிக் கிழங்கு, பச்சை மிளகாய் ஆகியவற்றின் விலைகளே அதிக விலைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் கவலை தெரிவித்துள்ளனர். (4-316)

# வவுனியாவிற்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தேவை கருதிய திடீர் இட மாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக சானக விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண் டார்.

வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சுபத் கலகமகே கொழும்பு நாரஹேன்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு (வாகனப் பகுதி) பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட சிரேஷ்ட



பொலிஸ் அத்தியட்சகர் வெற்றிடத்திற்கு குண்டசாலையில் அமைந்திருந்த பொலிஸ் பயிற்சிப் பிரிவில் பொறுப்பதிகாரியாக செயற்பட்ட சானக விக்கிரமசிங்க வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.(4-250)

# வெடிக்காத நிலையில் எறிகணை மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் லிகோரியார் தேவாலயத்தை அண்மித்த பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை குறித்த காணியில் வீட்டிற்கான அத்திபாரம் வெட்டும் பணியின் போதே வெடிக்காத நிலையில் எறிகணை அடையாளம் காண



ப்பட்டுள்ளது.இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் எறிகணையை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் நேற்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் R.K. விஜய நிர்மலா வழங்க வுள்ளார்.மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளது. (4)



ஈழத்து திரைப்படமான பாலை நிலம் என்ற முழு நீள திரைப்படம் கடந்த டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்பட்டது. இன்றையதினம் வவுனியாவில் திரையிடப்படவுள்ளது.

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுங்கள்

**கலாநிதி.ஆறு.திருமுருகன் வலியுறுத்து**

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெற்றுவரும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பிலே இதனை தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கையில் பல இடங்களிலும் வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகிறது. எனினும் இந்த விபத்துக்கள் தொடர்பில் யாரும் கவனிப்பதாக இல்லை இந்த விபத்துக்களில் வடக்கு மாகாணம் முன்னிலையில் காணப்படுகிறது.

இதனை தடுப்பதற்கோ அல்லது மாற்று வழிகள் தொடர்பில் சிந்திப்பது தொடர்பிலும் கவனம் இல்லை. விபத்துகள் நடைபெற்றால் மட்டும் அதுபற்றி கதைக்கிறார்கள் பின்னர் மறந்து விடுகிறார்கள். இவ்வாறு இருக்க முடியாது உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமையாகும்.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸார் சாதாரணமாக மோட்டார் சைக்கிளை பரிசோதிப்பதை மாத்திரம் செய்யாது போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் வாகனங்களையும் பரிசோதனை செய்ய வேண்டும்.

இ.போ.ச வண்டிகள் உட்பட அனைத்து வண்டிகளையும் சோதனை செய்யவேண்டும். சாரதி அனுமதிப் பத்திரங்கள் மட்டுமன்றி போக்குவரத்திற்கு ஏற்ப வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளனவா என்பதையும் சோதனை செய்ய வேண்டும்.



தூர போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்களும் ஒருசில இடங்களில் நிறுத்தி ஆலய வழிபாடுகள். உணவு உண்பதற்கான நேரங்கள் ,மலசல பயன்பாட்டிகளுக்கென நேரங்களை ஒதுக்கி சற்றுநேர ஓய்வு எடுத்து செல்வதற்கான ஒழுங்குகளை பின்பற்ற வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் துறைசார்ந்த அதிகாரிகள், பொலிஸார் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-33)

# திருவாசக முற்றோதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தில் ஆயிலிய குருபூசை, தினம் நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் திருவாசக முற்றோதல் நிகழ்வும் நடைபெறவுள்ளது என ஆலய அறங்காவலர் நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்புபோல் உபதேசித்தவர் யாருமில்லை. ஆனால் அது பேசுவதே கிடையாது.
– ஃப்ராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களின் கருத்துக்களை முடிந்தளவு உள்வாங்குங்கள்

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இவ்வேளை யில், தமிழ் அரசியல் தரப்புகள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய தார்மீகக் கடமையைக் கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் அரசியல் தரப்புகள் முன்வைக்க, ஆட்சித் தரப்புகள் அதனை உதாசீனம் செய்தன.

ஆனால் இன்று நிலைமை அதுவன்று.

மாறாக, எப்பாடுபட்டும் இனப் பிரச்சினை யைத் தீர்த்தே ஆக வேண்டும். அதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் போர் நடத்திய ஆட்சியாளர்கள் சர்வதேச நீதிமன்றில் நிறுத் தப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுடன், நாடு வறுமைக்குள் வீழ்ந்து தத்தளிப்பதும் தவிர்க்க முடியாமல் போகும் என்பதை சிங் கள அரசியல் தரப்புகள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளன.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு முழுமை யான தீர்வை வழங்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரைச் சமாளிக்கின்ற அளவில் – அவரை உடன்பட வைக்கின்ற வகையில் தீர்வுத் திட்டத்தை முன்மொழியக்கூடிய சந்தர்ப்பமும் உண்டு.

தவிர, வயோதிபம் காரணமாக இரா.சம்பந் தர் அவர்களிடம் ஏற்பட்டுள்ள தளர்வும் தனது காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிட வேண்டும் என்ற ஆசையாலும் தருவதைப் பெற்றுக் கொள்வோம் என்ற மனநிலை சம்பந்தரிடம் ஏற்படக்கூடிய வாய்ப் பும் உண்டு.

ஆக, மேற்போந்த எதிர்பார்ப்புகளை கவ னத்தில் கொண்டு, சறுகல் போக்குடைய அரை குறைத் தீர்வுகளைப் பெற்று போட்டுடைக் காமல் இருக்க, ஒட்டுமொத்தத் தமிழ்த் தரப்பு களும் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

மாறாக, அவர்கள் செய்வதைச் செய்யட் டும். செய்து முடிய அதில் குறை கண்டு அதனை நினைத்து நினைத்து கோசம் போடலாம் என்று யார் நினைத்தாலும் அதைவிட்ட ஈனத் தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆம், தமிழர் வரலாற்றில் இனப் பிரச் சினைக்கான தீர்வு என்பது சந்திரிகா குமார துங்க ஜனாதிபதியாக இருந்தபோது கனிந் தது.

ஆயினும் அந்தக் கனியை எந்தத் தரப் பாலும் ஏந்த முடியவில்லை.

அதன் விளைவாக இந்த நாடு கணிச மான மனித உயிர்களைக் காவு கொடுக்க வேண்டியதாயிற்று.

இப்போது மீண்டுமோர் சந்தர்ப்பம் கனிந் துள்ளது. இந்தக் கனியை – உணராமல் விடுவதும் காலம் கடத்துவதும் கனி அழுகிப் போவதற்கே வழி வகுக்கும்.

ஆகையால் முடிந்தளவு, தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதே தமிழ்த் தரப்புகள் முன் இருக்கக்கூடிய மிகப் பெரும் பொறுப்பும் கடமையும் காலத்தின் நியதியு மாகும்.

# 60 ஆயிரம் மெற்றிக்தொன் நிலக்கரி நாட்டைவந்தடைந்தது

(கொழும்பு)

60,000 மெற்றிக்தொன் நிலக்கரி ஏற்றிய கப்பல் புத்தளம் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மொசாம் பிக் கில் இருந்து 14 மில்லியன் டொலர் பெறுமதியான நிலக்கரி நாட்டுக்கு இறக்கு மதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, அந்த கப்பலில் உள்ள நிலக் கரியை தரையிறக்கும் பணிகள் தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறு வனத்தின் தலைவர் செஹான் சுமனசேகர தெரிவித்துள்ளார். (ம-7)

# ஐந்து ரயில் சேவைகள் நேற்றும் இரத்து செய்யப்பட்டன

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் ஐந்து ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நிலவும் ஊழியர் பற்றாக்குறையினால் ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது.

பிரதான ரயில் மார்க் கம், சிலாபம் ரயில் மார்க்கம், களனிவெளி ரயில் மார்க்கங்களி லேயே ஐந்து ரயில்சேவை கள் இரத்து செய்யப்பட் டுள்ளன.

ஊழியர் பற்றாக் குறை யினால் கடந்த சில தினங்களாக நாளாந் தம் சில ரயில் சேவை கள் இரத்து செய்யப் பட்டு வருகின்றன.

இதனால் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் பெரும் சிக் கலை எதிர்கொண்டுள்ள னர். (ம-7)

# மதுபான விற்பனை 50 சதவீதம் குறைந்துள்ளது

வரி அதிகரிப்பு மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை கள் காரணமாக கடந்த வருடம் மதுபான விற்பனை 50 வீதத்தால் குறைந் துள்ளதாக கலால் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதனை கலால்திணைக் களத்தின் பேச்சாளரும், வருமான நடவடிக்கை பிரிவின் மேலதிக கலால் ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவித்துள் ளார்.

2021 ஆம் ஆண்டுக் கான கலால் வருமானம் 140 பில்லியன் ரூபாயாக இருந்த நிலையில், கடந்த வருடம் கலால் வருமானம் 170 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. (ம-7)

## அநுராதபுரத்தில் மது போதையில்

# தாயை தாக்கிய மகனை கொலை செய்த தந்தை

(அநுராதபுரம்)

மதுபோதையில் வீட் டுக்கு வந்து தாயை தாக்கிய மகன் தந்தையின் தாக் குதலில் உயிரிழந்துள்ளதாக, அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 25 வய தான இளைஞரே உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் தனது தந்தை, தாய் மற்றும் உற வினர்களுடன் வசித்து வந்ததாகவும் கொலை செய் யப்பட்ட இளைஞர் தின மும் மது போதையில் வீட்டுக்கு வந்து தனது தாய், தந்தை மற்றும் சகோத ரர்களை தாக்கி வந்த்தாக வும் சம்பவ இடம்பெற்ற தினம் இரவும் மது அருந்தி விட்டு வந்து தனது தாயை தாக்கியபோது தந்தை அவரை தாக்கியதால் உயி ரிழந்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ம-7)

# குட்டித் தேர்தல் நடந்தால் மொட்டுக்கே வெற்றி

## நாமல் நம்பிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் ஸ்ரீல ங்கா பொதுஜன பெர முனவே வெற்றி வாகை சூடும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித் தார்.

இது தொடர்பில் ஊட கங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள் ளும் தயார்ப்படுத்தலில் மொட்டுக்கட்சி ஈடுபட்டுள் ளது. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நட வடிக்கை இடம் பெறுகி ன்றது. மொட்டுக்கட்சியு டன் கூட்டிணைந்து போட் டியிடும் கட்சிகள் தொடர் பான பேச்சுக்களும் இறு திக்கட்டத்தில் உள்ளன.

தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்த திகதிக் குள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வோம்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவு எதுவும் இன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் மொட் டுக் கட்சியே வெற்றியடை யும்" எனத்தெரிவித் தார். (4)

# மதம், இனத்தைக்கொண்டு பிரிவினைக்கு இடமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

எவருக்கும் மதத்தை நம்புவதற்கும் அவ்வாறு நம்பாதிருப்பதற்கும் உரிமை உண்டு என்றா லும், பிறருடைய நம்பிக்கை களையும் மதங்களையும் புண்படுத்தும் உரிமை யாருக்கும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலை பேருந்து வண்டியொன்று ஜா-எல நிவன்தம ஜினராஜ கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வால் நேற்று முன்தினம் அன்பளிப்புச் செய்யப்பட் டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்நாடு அனைத்து மதத்தினரும் அனைத்து இன மக்களும் நல்லிணக் கத்துடன் வாழக்கூடிய நாடு என குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், குறிப்பிட்ட சில புரட்சிக் கும்பல்களின் மதத் திற்கு எதிரான கருத்துக் களைக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

புரட்சி பற்றி பேசும் தரப் பினர் தலதா மாளிகையை யும் பௌத்த மதத்தையும் அவமதித்துப் பேசியதை வன்மையாக கண்டிப்பதாக வும் இவ்வாறானவர்களுக்கு சமூகத்தில் இடம் வழங்கக் கூடாது எனவும் மதம் குறித்து வேறுநிலைப்பாடு கள் இருந்தாலும் ஏனைய வர்களுக்கு தாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற் குரிய உரிமை அடிப்படை உரிமை சார்ந்தது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

மதங்கள் மற்றும் இனங் களுக்கு இடையில் பிரி வினையை உருவாக்கு வதன் காரணமாக, வரலாற் றில் இருந்து எண்ணற்ற பாடங்கள் கற்றுக் கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பரஸ்பர நம்பிக்கைகளை மதித்து நல்லிணக்கத்தை பரப்புவது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் தெரி வித்தார்.

மதத்தைக் கொண்டு, இனத்தைக் கொண்டு பிரி வினைக்கு இங்கு இட மில்லை எனவும் நாட்டை கட்டியெழுப்பவேண்டுமானால் சகவாழ்வு நாட்டிற்கு இன்றி யமையாதது எனவும், சகவாழ்வின் பிரகாரமே நாடு முன்னேற முடியும் எனவும் அவர் தெரிவித் தார்.

இனவாதத்தைப் பேசி பிளவுகளை ஏற்படுத்துவ தனால் அரசியல்வாதிகளே வெல்லுவதாகவும், நாட்டு மக்களும் நாடுமே தோல் வியைத் தழுவுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டி னார்.

அரசியல் கட்சிகள் தரப்பு களாக பிரிந்து தேர்தலில் போட்டியிடுகின்ற போதி லும், நாட்டைக் கட்டி யெழுப்புவதற்கும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** பிரதிப் ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-கார்த்தான் கோட்டம், குழுமாட்டுசந்தி, மறக்க ரம்பளை, கணேசபுரம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை அடக்குவதற்கு உயர் அதிகாரம் கொண்ட செயலகம்

## ஜனாதிபதி ரணில் பணிப்புரை

**(கொழும்பு)**

**இலங்கையில் போதைப்பொருள் தடுப்புக்காக பூரண அதிகாரம் கொண்ட செயலகத்தை நிறுவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.**

இது தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு திணைக்களத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

போதைப்பொருள் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியை பலப்படுத்துவதற்காக இந்த விசேட அலுவலகம் நிறுவப்பட உள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் கீழ் அது தொடர்பான அதிகாரங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இது தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்பு அலுவல்களின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் தலைமையில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (4)

# ஆசன எண்ணிக்கைக்கு பயணிகள் சட்டம் நீக்கம்



(கொழும்பு)

ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்வது தொடர்பான சட்டம் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் குறித்து போக்குவரத்து அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கொரோனா தொற்றுநோய் வேகமாகப் பரவுவதைக் கருத்தில் கொண்டு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பயணிகளை பேருந்து இருக்கைகளின் எண்ணிக்கைக்குமட்டுப்படுத்தும் சட்டத்தை விதித்தார்.

இதனையடுத்து பேருந்து கட்டணமும் 20 சதவீதம் உயர்த்தப்பட்டது. இருப்பினும், தொற்றுநோயின் முடிவில், அதிகரித்த சதவீதத்தில் 10 சதவீதம் மட்டுமே குறைக்கப்பட்டது.

எனினும் இன்று, குறித்த சட்டம் நடைமுறையில் இல்லை, எனவே 10 சதவீத அதிகரிப்பை குறைக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா:சூரி 2 செவ் 9 இல்
தகைமை/
தொழில்:MBA(விரிவுரையாளர்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13228

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா:36 சூரி 6 செவ் 7இல்
உயரம்:5'9"
தகைமை/ தொழில்:சட்டத்தரணி
எதிர்பார்ப்பு: only professional job
தொ.இ: B/13229

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா:48 சூரி ,செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/ தொழில்:
ஆசிரியர்(சொந்தக்கடையும் உண்டு)
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ: B/13230

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா:சூரி 11 செவ் 9 இல்
உயரம்:170 cm
தகைமை/ தொழில் -post peon
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13231

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா:21 சூரி 9 செவ் 6 இல்
உயரம்: 156 cm
தகைமை/ தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ:G/13262

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா:42 ½ சூரி 2 செவ் 3
உயரம்: 150 cm
தகைமை/ தொழில்:ஆசிரியர்
எதிர்பார்ப்பு:நிரந்தரத்தொழில்
தொ.இ:G/13263


பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்:அத்தம் 1
கி.பா: 16 சூரி, செவ் 9 இல்
உயரம்:155 cm
தகைமை/ தொழில்: BA 3rd year
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு / அரச தொழில்
தொ.இ: G/13264

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம் 3
கி.பா:57 சூரி 7 செவ் 4 இல்
உயரம்:165 cm
தகைமை/தொழில்: Bsc,Msc
(அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு: உயர்கல்வி அல்லது உயர் பதவி அவுஸ்திரேலியாவில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொ.இ: G/13269

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# அரிசி வகைகளில் மருத்துவப் பயன்கள்

## ஆய்வில் தகவல்



(கொழும்பு)

புற்றுநோய், நீரிழிவு மற்றும் பல நோய்களை உள்ளூர் அரிசி வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி சிறிமல் பிரேமகுமார தெரிவித்தார்.

25 வகையான உள்ளூர் அரிசி வகைகளை பயன்படுத்தி 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில், சுதுஹீனாட்டி, கொட ஹீனாட்டி, திக்வீ மற்றும் மசூரன் அரிசி வகைகளின் மருத்துவப் பயன்கள் குறித்த அறிவியல் ஆய்வுக் கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் பாரம்பரிய அறிவை விஞ்ஞான ரீதியாக நிரூபித்த இந்த ஆய்வு முடிவுகளை ஒரு நாடாக இலங்கை, சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதாக தெரியவில்லை என கலாநிதி பிரேமகுமார தெரிவித்துள்ளார். (4)

# இலங்கையில் கடல் மட்டம் உயரும் அபாயம்!

(கொழும்பு)

இலங்கையில் கடல் மட்டம் உயரும் அபாயம் உள்ளதென நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாட்டின் காலநிலையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றமே இதற்கான காரணம் என அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் வறண்ட காலநிலை அதிகரித்து வருவதாக சொல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் சுற்றுச்சூழல் ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் பணியாற்றி வருகின்ற நிலையில் அரசாங்கத்திற்கு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 600 | 600 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 |
| தக்காளி | 200 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 |
| கோவா | 120 | 160 | 150 |
| கரட் | 200 | 300 | 350 |
| பூசணி | 150 | 150 | 200 |
| புடோல் | 300 | 200 | 280 |
| வாழைக்காய் | 150 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 650 | 700 | 1200 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 240 |
| பாகற்காய் | 600 | 400 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 350 | 400 |
| பீற்றூட் | 500 | 500 | 600 |
| கறிமிளகாய் | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | -- | -- | 200 |
| போஞ்சி | 400 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 650 | 600 | 500 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 140 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 600 | -- | 1000 |
| முள்ளங்கி | 200 | -- | 240 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டையின்...

கொழும்பில் 10 லட்சம் முட்டைகளை விநியோகிப்பதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கிடையில், முட்டை இறக்குமதிக்காக திங்கட்கிழமை சர்வதேச டெண்டர் கோரப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## சாதாரண தர...

தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் இறுதி அனுமதியின் பின்னர் பரீட்சைக்கான சரியான திகதிகள் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## வட்ஸ்அப்...

களை ஏற்பாடு செய்த குழுவினரே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

விசேட அதிரடிப்படை வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், நேற்று முன்தினம் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## அமெரிக்க...

விஜயம் செய்ய உள்ளார்.

இலங்கை வரும் அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (ம-7)

## உள்ளூராட்சி தேர்தல்...

கள் மற்றும் அடுத்த கட்ட செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடவுள்ளதாக ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 11ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வருமாறு அனைத்து கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்தல், ஏனைய ஆவணங்கள் மற்றும் தேர்தல் தொடர்பிலான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக கட்சியின் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

11ஆம் திகதி காலை 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ம-7)

## யாழ். - தமிழக...

சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருடனான சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின் பின்னர் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சென்று நிலைமைகளை பார்வையிட்ட பின்பு என்னோடு கலந்துரையாடினர்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பணிகளில் வடமாகாண சபை எவ்வாறான உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடினோம்.

இறங்குதுறை மற்றும் சுங்கப் பகுதி கட்டுமானங்களை ஆரம்பிப்பது தொடர்பில் கப்பல் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ரூவான் சந்திர தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநருக்கு தெளிவுபடுத்தினர்.

முதற்கட்டமாக இறங்குதுறை மற்றும் சுங்கத் திணைக்கள கட்டுமானங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்ததுடன் எதிர்வரும் மாதங்களில் குறித்த திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தேர்தல் முறை...

பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கல்வி அமைச்சுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் நான்கு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதிக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது கேட்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17 வரை நடைபெற உள்ளது. (ம-7)

## இந்தியா...

தியா எப்போதும் துணை நிற்க வேண்டும் என சென்னையில் வைத்து சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

சென்னை வர்த்தக மையத்தில் இடம்பெற்ற 9ஆம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவழி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியா சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், விடுதலைச் சிறுத்தை கட்சி தலைவர் தொல்.திருமாவளவனுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஏ.என்.ஐ.செய்தி சேவைக்கு கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை வாழ் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுத் திட்டத்தில் அந்த மக்களின் சார்பாக இந்தியாவே முன்னின்று செயற்பட்டது. எனவே அரசியலமைப்பு ரீதியிலான தீர்வு திட்ட விடயத்தில் இலங்கை தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதொன்றாகும்.

தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு விஜயம் செய்வதற்கு முன்னரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றினேன்.

பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னரான ஒரு காலவரையறைக்குள் தீர்வுத் திட்டத்தை அடைவதற்கான அரசுடனான பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கலந்து கொண்டு வருகின்றோம். முழுமையான அதிகாரப் பகிர்வு நோக்கிய தீர்வுத் திட்டத்தில் எமது முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு வழங்குவோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுவே பெரும் சிக்கலாகும். எனவே தான் குறைந்தது அந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதுடன், இதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பினையும் கோருகின்றோம் என்றார். (ம-7)

## உள்ளூராட்சி...

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்தும் முழு அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றமும் சிறந்த தீர்ப்பை வழங்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தோல்விப் பயத்தாலேயே தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் குறிப்பிட்டார். (ம-7)

## தீப்பந்தப்...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1448
வெற்றி இலக்கங்கள்
கன்னி 4 1 4 8 0 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1023
H 15 30 35 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 3235
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 10 30 36 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1341
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
H 15 19 29 66 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 302
வெற்றி இலக்கங்கள்
தனுசு 28 30 37 45 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/07
சீட்டிழுப்பு இலக்கம் 4993
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 0 1 4 4 8 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1968
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.07
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,533,820/-
P 24 39 44 46

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.07
சீட்டிழுப்பு இல : 4129
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,079,060/-
வெற்றி இலக்கங்கள்
02 03 15 45
G

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,717,862/-
திகதி 2023-01-07
வெற்றி வாரம் 3680
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்
10 33 46 50
3260
014
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,833,660/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 15 42 47 53 61
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1144
சிவப்பு
திகதி 2023.01.07 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 295,098,056.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 560
திகதி 2023-01-07
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 02 04 59
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 15,842,500/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1794
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.01.07
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,886 20/-
அத கோடிபதி
ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள்
11 21 32 57
E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே நபர்கள் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். குறித்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் எந்தவொரு நபரும் தாமாக முன்வந்து புனர்வாழ்வு நிலையத் திற்கு செல்ல முடியும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கம்பளையில் புதிதாக புனர்வாழ்வு மையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள் ளது. தற்போது புனர்வாழ்வு மையங்களில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களே அதிகமாக காணப்படுவதால், எதிர்வரும் காலங்களில் அதிகாரிகளின் அனுமதியின்றி வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார். (ம-7)


## வேலையாள் தேவை

யாழில் இயங்கும் புத்தக மற்றும் போட்டோ கொப்பிகடைக்குஅனுபவ மிக்க வேலையாள் தேவை.

Tel : 076 832 3682

(14181)

## பணிப்பெண் தேவை

வல்வெட்டித்துறையில் வீட்டுவேலைக்குபணிப் பெண் தேவை

தொடர்புகளுக்கு : 077 199 6912

(C-5749)

## யாழ்/மாவட்டத்தில் உள்ள கடையில் வேலை வெற்றிடம்

விற்பனையாளர்

(Salesmen/Sales Girls) தேவை

தகுதி : G.C.E O/L அல்லது A/L, Internet, Computer MS

வயது : 18 – 35

Tel : 076 287 8157

(14156)

## வீட்டுவேலைக்கு ஆள்தேவை – பெண்கள்

உரும்பிராயில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு துப்பரவு செய்தல், சமையல் மற்றும் வயதான அம்மா ஒருவரிற்கு உதவிக்கு பெண் வேலையாளர் ஒருவர் தேவை. தங்குமிடம் இல்லை, தினமும் வேலைக்கு வந்து செல்ல வேண்டும். பயண போக்குவரத்து இலகுவானவர்கள் நல்லது. சம்பளம் நேரில் கதைக்கப்படும்.

பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 773 0900

(14167)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(13675)

## விரைவில் சிங்களம் பேச...

குறைந்த கட்டணத்தில் நான்கு மாதத்தில் சிங்களம் தெளிவாக பேசலாம். இன்றே இணையுங்கள்.

077 065 2181
070 403 5735

2023

(14180)

## வேலை வாய்ப்பு

### ✠ களஞ்சிய காப்பாளர் (Store Keeper)

| | | |
|---|---|---|
| பால் | : | ஆண் |
| தகமை | : | O/L, கணினி அறிவு |
| வயது | : | 40 வயதிற்கு மேல் |
| சம்பளம் | : | 30000 வரை (நிபந்தனைக்குட்பட்டது) |

### ✠ பண வசூலிப்பாளர் (Cash Collector)

| | | |
|---|---|---|
| பால் | : | ஆண் |
| வயது | : | 30 வயதிற்கு மேல் |
| சம்பளம் | : | 30000 வரை (நிபந்தனைக்குட்பட்டது) |

### ✠ Seles Helper (விற்பனை உதவியாளர்)

| | | |
|---|---|---|
| பால் | : | ஆண் |
| தகமை | : | O/L |
| வயது | : | 18 வயதிற்கு மேல் |
| சம்பளம் | : | 25000 வரை (நிபந்தனைக்குட்பட்டது) |

திருநெல்வேலிக்கு அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 009 0189

(14182)

## வைத்தியம்

நீண்டகாலமாக மருந்து மாத்திரை எடுத்து உங்கள் நோய் மாறவில்லையா??? என்னை நாடுங்கள், அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு உண்டு.

அழையுங்கள் : 077 035 7307

(Acu) Dr.R.P.Sankar

(இலவச ஆலோசனைக்கு முன் பதிவு அவசியம்)

(14158)

## மணமகள் தேவை

லண்டனில் வசிப்பவர் (PR) 81ஆம் ஆண்டு பிறந்தவர் (A/L ) சித்தி 2 வருடம் லண்டனிலும் கல்வி கற்றவர். 5',8'' உயரம். இவருக்கு படித்த பெண், ஆங்கிலம் கதைக்க, எழுத, கொம்பியூட்டர் மிகவும் தெரிந்திருத்தல் நன்று. (இந்து, கத்தோலிக்கம்) பெண் லண்டனில் இருப்பவர் விரும்பத்தக்கது. இங்கு 5 வருடம் படித்த தாதி, வங்கியில் வேலை செய்வோரும் நன்று. முக்கியம் நன்றாக படித்த பெண் நல்ல் குடும்பப் பெண்ணை வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு : 075 961 1578, 077 668 3717

(14178)

## காணி வீடு விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும் கண்டி வீதிக்கும் அருகில் உள்ள நிலப்பரப்பு 1 1/2 கொண்ட வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு.



தொடர்புகளுக்கு : 077 229 4985

(14133)

## காணி உடனடி தேவை

இலங்கையில் பிரபலமான தனியார் பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றினை அமைப்பதற்கு K.K.S / பலாலி ஐ அண்டிய பகுதியில் 10 ஏக்கருக்கும் அதிகமான அளவு உறுதிக்காணி உடனடி தேவையாக உள்ளது.

தொடர்புகளுக்கு : 076 719 9789

(14179)

## மணமகள் தேவை

1978 இல் பிறந்த சதய நட்சத்திரம் 16 3/4 கிரக பாவமுடைய 11 இல் செவ்வாய் உள்ள 9 இல் சூரியன் உள்ள சுய தொழில் புரியும் விவாகரத்து ஆன மணமகனுக்கு நற்குணமும் சைவ போசனமுடைய மணமகள் தேவை.

தொடர்பு

077 908 4823

(13958)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு – ஜெயம்

077 814 7389, 077 241 7589

(14188)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு – ஜெயம்

077 986 5457, 077 026 7619

(14188)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org